1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு தை மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 4-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

மழைக்கோலம் அதிகமாகக் காணப்படுகின்றது. காலத்துக்கேற்ற கடும் பனியில்லை. இடையிடையே குளிரோடுகூடியகாற்று வீசிக்கொண்டிருக்கிறது. பொதுவாக யாழ்ப்பாணக்குடாநாட்டிலும், தீவப்பகுதிகளிலும் நெல் வேளாண்மை மிகநன்றாயிருக்கின்றது. வெங்காயவிலை குறைந்ததையிட்டு மிக ஏராளமாக எங்குமே வெங்காயஞ் செய்கைபண்ணியவர்கள் கவலைகொள்ளுகின்றார்கள். ஆயினும் அதன்விலை விரைவில் ஏற்றமடையுமெனப் பலரும் எதிர்பார்க்கின்றனர். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து வெங்காய வியாபாரிகள் குறைந்தவிலையில் வெங்காயத்தை வாங்கிக் கொள்ளைலாபம் அடிக்கப்பார்க்கிறார்களென்ற எண்ணமும் பிறவாமலில்லை.

### செனற்சபைத் தலைவர்

இலங்கைச் சர்வகலாசாலையின் உபவேந்தராகவேண்டிச் செனற்சபைத் தலைவர்பதவியை இராசினாமாச் செய்துள்ள சேர் நிக்கலஸ் அற்றிக்கலை அவர்களிடமாகத் திரு. சிறில் டிசொய்சா அவர்கள் செனற்சபையின் புதிய தலைவராகச் சென்ற வியாழக்கிழமை போட்டியின்றித் தெரியப்பெற்றிருக்கின்றார்.

### புத்தளை இடைத்தேர்தல்

சேர் லீயோ பெர்னாண்டோ அவர்களின் மரணத்தாலே பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள்சபையில் காலியாயிருக்கும் புத்தளை ஸ்தானத்துக்கு அபேட்சகர்களாய்த் திரு. கால்ட்வின் கொத்தலாவல, திரு. ஏள் அபெயசூரிய எனுமிருவரும் முன்வந்து பதுளைக் கச்சேரியிலே தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

### முப்பதுவருடக் குடிகாரன்

வெலிகாமத்தைச்சேர்ந்த வெல்லக்க மாதர்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா சென்ற 12-ந்திகதி நடந்தேறியது. அதிலே பாராளுமன்ற அங்கத்தவரான திரு. சி. எல். டபிள்யு. எதிரிசூரிய அவர்கள் பேசியபோது: இந்நாட்டில் மிருகங்கள் உணவுக்காகக் கொல்லப்படுவதைத் தடைசெய்யும் வரை நான் அமைதியாக இருக்கப் போவதில்லை; எனது கட்சியின் அதிருப்தியை நான் சம்பாதித்துக் கொண்டாலும்காரியமில்லை. இந்தஇலட்சியத்துக்காகப் போராடத் தயாராயிருக்கிறேன்; குற்றங்கள் நடைபெறக் காரணம், மிதமிஞ்சி மதுபானம் அருந்துவதுதான்; சுமார் 30 வருடங்களாக நானும் ஒரு குடிகாரனாகவே யிருந்தேன்; ஆனால், நான் பாராளுமன்ற அங்கத்தவனாய்த் தெரியப்பட்டபின் அடியோடு குடியைக் கைவிட்டேனெனக் கூறலாயினர்.

### யாழ்ப்பாண நகரசபை

யாழ்ப்பாண நகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம் மாதந்தோறும்இரண்டாம்வெள்ளிக்கிழமை பிற்பகல்3மணிக்கு நடத்தப்பட வேண்டுமெனச் சபை கூடித் தீர்மானித்திருக்கிறது.

### மானுக்குப்பதில் மனிதன்

கரைச்சிப்பகுதிக் காட்டுக்கு வேட்டையாடுதற்கெனச் சென்றசெவ்வாய்க்கிழமை ஐவர்சென்றனர். இவர்களில் கணபதிப்பிள்ளை, மாணிக்கன் எனும் இருவரும் ஒவ்வோர் துப்பாக்கியும், பொன்னுத்துரை என்பவர் ஓர் ரோச்லைற்றும் கொண்டுசென்றனர். மானின் கண்ணொளியைக்கவனித்துப் பொன்னுத்துரை இலக்குவைத்துச் சுட்டபொழுது ஐயோஎன்ற சப்தம்கேட்டது. அவ்விடம் ஓடிச்சென்று பார்த்தபோது, மாணிக்கன் தனதுவயிற்றில் குண்டுபாய்ந்த நிலையில் கிடந்தான். அவன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிறிதுநேரத்துள் இறந்துபோயினன்.

### இலங்கைப் பிரதமசேனபதி

தற்போது இலங்கை இராணுவத்தின் பிரதமசேனபதியாகக் கடமையாற்றிவந்தவர் மற்றோர் உத்தியோகத்தை முன்னிட்டு இங்கிலாந்துக்குச் செல்வதால் தற்போது இலங்கை இராணுவ முதற்படையின் தலைமைஅதிகாரியான கர்னல் அன்ரன் முத்துக்குமாருஅவர்கள் இலங்கைஇராணுவத்தின் பிரதம-சேனபதியாக நியமனஞ் செய்யப் பெற்றுள்ளார். இவர் தற்போது இங்கிலாந்திலே இராணுவ சம்பந்தமாகச் சில்முக்கிய பயிற்சிபெற்று வருகின்றார்.

### மன்னாரில் வயோதிகர்சாலை

மன்னார்ப்பட்டினத்தில் வயோதிகர்சாலை ஒன்றை அமைப்பதென்று சென்றவெள்ளிக்கிழமை அப்பட்டின சங்கதலைவர் திரு. வீ. ஏ. அழகக்கோன்அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஓர் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது அடுத்த பங்குனிமாத முற்பகுதியில் பத்துத் தினங்களாக ஓர் களியாட்டவிழா நடத்தி அதில்சேரும் பணத்தைக் கொண்டு வயோதிகர்சாலைக் கட்டடம் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு, இதுவிஷயமாய் ஆகவேண்டியவற்றைக் கவனிக்குமாறு தனிக்கம்மிற்றிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### தேயிலை ஏற்றுமதிவரி

தேயிலைஏற்றுமதிவரி சென்றவியாழக்கிழமைமுதல் ஒருறுத்தலுக்கு 1 ரூபாவிலிருந்து, 1ரூபா 30சதமாக ஏற்றப்பட்டு, அன்றிரவு நடுச்சாமமுதல் நடைமுறைக்குவரலாயிற்று. இந்தவரி ஏற்றத்தாலே அரசினருக்கு வருடம் ஒன்றுக்கு 4கோடியே 50லட்சம் ரூபா மேலதிகவருமானம் கிடைக்கவிருக்கிறது. சென்றகார்த்திகை 19-ந் திகதியன்றுதான் தேயிலைஏற்றுமதிவரி றுத்தலுக்கு 75சதத்திலிருந்து ஒரு ரூபாவாக ஏற்றப்படலாயிற்று. தற்போதைய வரியேற்றத்தால் பிறநாடுகளில் இலங்கைத் தேயிலையின்விலை அதிகரிக்கமாட்டாதெனச் சொல்லப்படுகிறது.

### சர்வகலாசாலை உபவேந்தர்

இலங்கைச் சர்வகலாசாலையின் புதிய உபவேந்தரும், முதலாவதுஇலங்கையருமான சேர் நிக்கலஸ் அற்றிக்கலை அவர்கள் சென்றவெள்ளிக்கிழமை தமதுபுதியபதவியைக் கையேற்றிருக்கின்றார். முதலாவதுஇலங்கையராய் இருந்தபோதிலும் எவ்விதஆரவாரத்துக்கும் இடமில்லாமலே அன்றுஇவர் நேரே தமது காரியாலயம்சென்று கடமைபார்க்கத் தொடங்கினார்.

### மன்னாரும் வேளாண்மையும்

மன்னார்ப்பிரிவிலே கடந்த இருமாதங்களிலும் பெருமழைபெய்தபோதிலும் அங்குள்ளவயல்கள் வெள்ளத்தினால் சேதமடையவில்லை நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியும்கமக்காரர் அதிகாரிகளின் உதவியோடு உடன் நடவடிக்கைஎடுத்து வயல்களிலுள்ள வெள்ளநீரை வெளியேற்றி விட்டனர். இம்முறை ஏறக்குறைய 35,000 ஏக்கர் நிலத்தில் காலபோகப்பயிர் செய்யப்பட்டிருக்கிறது.

### பிரதமரின் பிரயாணம்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் லண்டன்நகரில் நிகழவிருக்கும் சாம்பிராச்சிய நாடுகளின் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு நேற்றுப்பிற்பகல் விமானமூலம் லண்டனுக்குப்பயணமாயினர். இவர்போகும் வழியில் இரண்டுநாள் எகிப்தியகெய்ரோ நகரில் தங்குவார். மகாநாடு முடிபடைந்ததும் ஒல்லாந்து, மேற்குஜேர்மனி எனும்நாடுகளுக்கு விஜயஞ்செய்துவிட்டுக் கராச்சிவழியாக அடுத்த மாசிமாதம் 18-ந்திகதி கொழும்புவந்து சேருவார்.

### புதியசெனற்றர் நியமனம்

இலங்கைச் சர்வகலாசாலையின் உபவேந்தராகத் தெரியப்பெற்றுக் கடமையேற்றுள்ள சேர் நிக்கலஸ் அற்றிக்கலை அவர்கள் தமதுசெனற்றர்பதவியை இராசினாமாச் செய்தமையாலே அவரிடமாகப் புதியசெனற்றராய்த் திரு. ஜே. ஈ. எம் டி சேறம்அவர்கள் கவர்னர்-ஜெனறலாலே தெரியப்பெற்றிருக்கின்றார். புதியசெனற்றர் ஓ. பி. ஈ, ஜே. பி., யு. எம். பட்டங்கள்பெற்றவர். ஐக்கியதேசியக்கட்சியின் உயிர்நாடியாக உள்ளாரில் ஒருவராயிருந்து அதன்முயற்சிகளில் ஊக்கமாக ஈடுபட்டு வந்திருக்கிறார். இவர் கொழும்பு நகரசபையில் 1949-ம் ஆண்டு முதல் மாதம் பிட்டிலட்டாரத்தின் அங்கத்தவராய் இருந்துவருகின்றார். ஓர்நிலச்சுவாந்தாரும், மிலசொந்தக்காரரும், கொழும்புநகர்வடக்கிலுள்ள மிகவிசேஷப்பட்ட சமூகதொண்டர்களில் ஒருவருமான இவரும், இவர்குடும்பத்தினரும் பல்வேறு தருமஸ்தாபனங்களுக்கும், சமயஸ்தாபனங்களுக்கும் உதாரசிந்தையுடன் உதவிசெய்துவந்திருக்கின்றனர். இவர்பாலத்துறை விசாரணைப்பங்குச் சென்வின்சென்ற்டிபோல் தருமசபையின் தலைவர். கொட்டாஞ்சேனைக் கத்தோலிக்க இளைஞர்சங்கத்தின் உபதலைவர். கொழும்பிலுள்ள மற்றும் அநேக ஸ்தாபனங்களிலும் இவர் உத்தியோகபதவிகள் வகித்திருக்கின்றார்.

### பிரதம நீதியரசர்

தற்போது இலங்கைப் பிரதமநீதியரசராய் இருந்து வருகின்ற சேர்அலன் ரோஸ்அவர்கள் தமதுபதவியிலிருந்து இளைப்பாறுதற்காயத்தமாய் வருகிற ஆனிமாசம் 15-ந்திகதியன்று லீவிலே செல்லவிருக்கின்றார். இவருக்குத்தற்போதுவயது 55. இவரிடமாகத் தற்போது பிரதம உதவிநீதியரசராகக் கடமைபார்த்து வருகிறவரான திரு. சி. நாகலிங்கம் அவர்கள் ஆனிமாதம் 15-ந்திகதி முதல் பிரதம நீதியரசராகக் கடமையாற்றுமாறு நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

### கமத்தொழிற் செலவு

இலங்கை சுதந்திரம்அடையுமுன் கமத்தொழில் விருத்திக்கென வருடம் ஒன்றுக்கு 30 லட்சம்ரூபா செலவு செய்ததற்குப்பதில் தற்போது 3கோடி ரூபா செலவிடுகின்றது; 30 லட்சம் ஏக்கர் காட்டுநிலத்தைத் துப்புரவுசெய்து அதனைக் கமத்தொழிலுக்குப் பயன்படுத்தத் தன்னாலியன்ற பிரயாசையெல்லாம் எடுத்துவருகின்றதென்று உணவு-கமத்தொழில் மந்திரியாரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் களனியைச்சேர்ந்த கிறிபத்கொடைக் கிராமஅபிவிர்த்திச் சங்கத்தின் வருடாந்தகூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார்.

### பிரதமரும் சமயக்கல்வியும்

அவிசாவலையைச்சேர்ந்த தும்பிட்டியிலுள்ள அரசினர்பாடசாலைப் புதிய கட்டடத் திறப்புவிழாவில் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் பேசியபோது: ஒவ்வொருவருமே ஒவ்வோர்சமயத்தைக் கைக்கொள்ளவேணடும்; கைக்கொண்டு அதன்படி ஒழுகிவரவேண்டும்; திரு. கன்னங்கராஅவர்கள் கல்விமந்திரியாராய் இருந்தபோது நான்குலட்சம் பிள்ளைகள்வரையில் பாடசாலைகளிற்சேர்ந்து படித்துவந்தார்கள்; ஆனால், தற்போது பதினாறலட்சம்பிள்ளைகள் படித்துவருகிறார்கள்; அவர்களின்கல்விக்கென அரசாங்கம் வருடம்ஒன்றுக்குப். 16 கோடிரூபா செலவிடுகின்றது; என்றாலும், இரண்டு லட்சம் பிள்ளைகள்வரையில் இன்னும் எந்தவிதமான கல்வியுமேபெறாதிருக்கின்றார்களெனக் கூறலாயினர்.

### இரத்த உபகாரிகள்

கொழும்பிலே இரத்தவங்கிபெறுகின்ற மனிதஇரத்தத்தில் மூன்றில் ஒருபங்கு இலங்கையிலுள்ள கிராம அபிவிர்த்திச் சங்கங்களின் அங்கத்தவர்களிடமிருந்தேயெனத் தெரியவருகிறது. இதிலும் நூற்றுக்குத் 90வீதம் கட்டுகெம்பளைகாற்பற்றுக் கிராம அபிவிர்த்திச் சங்கங்களின் அங்கத்தவர்களிடமிருந்தே பெறப்படுகின்றது. இவர்களில் 25 பேர் வாரத்திலே புதன்கிழமைதோறும் ஓர் கூட்டமாக வெலிசறைஆஸ்பத்திரிசென்று இரத்தம் உதவிவருகின்றார்கள். ஏற்கனவே இவர்கள் 98முறை அவ்வாறுசென்று இரத்தம் உபகரித்துத் திரும்பியிருக்கிறார்கள். வருகிறமாசிமாத ஆரம்பத்திலே இவர்களின் 100-வது கூட்டம் வெலிசறைஇரத்தவங்கிக்குச் செல்லவிருக்கிறது. அப்போது உள்நாட்டுமந்திரியாரும், மற்றும்உயர்தர அதிகாரிகளும் இவர்களை வரவேற்கவிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த உள்ளம்

(S. லோறென்ஸ் தர்மராஜ், B. A., B. Sc.)

அந்தப்பைத்தியகாரர் ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்களைப் பார்க்கப் பார்க்க எனக்கு உலகத்தின்மீதே வெறுப்புஏற்பட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர்களில்தான் எத்தனைரகம். தானே சிரித்துக்கொள்பவர்கள், தானே பேசிக்கொள்பவர்கள், தன்முன் திரண்ட மக்கள்கூட்டம் ஒன்று இருப்பதாக நினைத்துக்கொண்டு ஆங்கிலத்தில் அழகாகச் சொற்பொழிவாற்றுபவர்கள், எதிரேயுள்ளமரத்தை மனிதனாகஎண்ணிக்கொண்டு கண்டபடிகிட்டிக் கற்களை அதன்மேல் வாரி எறிபவர்கள் — இப்படி எத்தனையோ. இன்னும் அரைப்பைத்தியம், முழுப்பைத்தியம், பாட்டுப்பைத்தியம், பெண்பைத்தியம், சினிமாப்பைத்தியம் இப்படிஎத்தனையோ. இவர்களை எல்லாம் பார்க்கப்பார்க்க எனக்குத் துயரம் உண்டாயிற்றேயன்றிச் சிரிப்பே வரவில்லை.

ஒவ்வொன்ருகப் பார்த்துக்கொண்டு வந்தநான் ஒருமரத்தருகில் வந்ததும் அப்படியேநின்றுவிட்டேன். அந்த மரத்தின் அடியில இளம்வயதினனை ஒருசிற்பிஉட்கார்ந்து கல்லில் ஒரு பெண்ணின்உருவத்தைச் செதுக்கிக்கொண்டிருந்தான். எவ்வளவு அழகாக இருந்தது அந்தச்சிலை. அந்த முகத்தில்தான் என்னகளை. கன்னங்குழியச் சிரித்துக்கொண்டிருந்தாள் அவள். பிறைநுதல்போன்ற நெற்றியில் அவளதுகேசம் சுருண்டு விளையாடிக்கொண்டிருந்தது. கண்களில் தான் என்னகவர்ச்சி. கயல்மீன்கூட அவைகளைக்கண்டு நாணிஓடிவிடும். தாமரைமலர் விரிந்ததுபோல் அவளின் அதரங்கள் விரிந்து முத்துப்பல்வரிசையை அழகாகக்காட்டின. அந்த உருவம் உயிரற்ற ஓர்சிலையாகவே எனக்குத் தோன்றவில்லை. உயிருள்ள மானிடப் பிறவியாகவே தோன்றியது. நாம் அருகில்நிற்பதைத்தானும் கவனியாது அந்தமங்கையின் காலொன்றைச் செதுக்குவதில் மூனைந்திருந்தான் அந்தச்சிற்பி. அவனைச்சுற்றிலும் சிற்பங்கள். எல்லாவற்றிற்கும் ஒரே முகச்சாயல். சிரிக்கிறதுபோல் ஒன்று, ஆடுவதுபோல் ஒன்று, சோகமுகத்துடன் ஒன்று. இப்படியாக எல்லாம் இப்பொழுது அவன் உருவாக்கிக்கொண்டிருக்கும் அதேபெண்ணின் பல்வேறு தோற்றங்கள் உயிரற்றகல்லிற்கே உயிரைக்கொடுக்கும். இந்தச்சிற்பி பைத்தியகாரர்ஆஸ்பத்திரியில் ஏன் இருக்கிறுன் என்றே எனக்குப்புரியவில்லை.

என்னை அழைத்துவந்த டக்றரின் முகத்தை நோக்கினேன். எனது கேள்வியை அவர் உணர்ந்துகொண்டவர்போல்: "இவன் உலகின் தலைசிறந்தசிற்பி; ஆனுல், துரதிர்ஷ்டவசமாகப் பைத்தியமாகிவிட்டான்; இந்த உருவம் யாரென்று கேளுங்கள் அவனை" என்ருர். நான் அவன் அருகில் சென்று, "யாரப்பா இந்தப்பெண்? எவ்வளவு அழகாக இருக்கிருள்" என்றேன். குனிந்திருந்ததலையை நிமிர்த்தினுன் அவன். தாடிவளர்ந்திருந்த அவன்முகத்திலே ஒரு அலாதியான வசீகரம் தென்பட்டது. "தெரியவில்லையா உங்களுக்கு? இவள்தான் கமலா; இன்னும் சிறிதுநேரத்தில் இங்குவந்துவிடுவாள்; அதற்குள்ளாக இதைமுடித்துவிடவேண்டும்" என்று கூறிவிட்டு மறுபடியும் தன்வேலையில் ஈடுபட்டான் அவன். இவனு பைத்தியம்என்று திகைத்துநின்ற என்தோளைப்பற்றி என்னை அழைத்துச்சென்ருர் என் நண்பர் டக்றர்.

"என்னடக்றர்! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே; இவன் எப்படிப் பைத்தியமானுன்? என்றேன் நான்.

"இவன்வாழ்க்கையே ஒரு சோக நாடகம்; அடுக்கடுக்கான துன்பம் மலைபோல்வந்து மோதினுல் பைத்தியம் பிடிப்பது இயற்கைதானே; துன்பம் என்னும் சூருவளியால் அலைக்கழிக்கப்பட்டுப் புத்திபிறழ்ந்த துரதிர்ஷ்டசாலிகளில் இவனும்ஒருவன்" என்று கூறிவிட்டு, "நீங்கள் கதைகேட்கத் தயாரென்ருல் சொல்லுகிறேன்" என்று சொல்லஆரம்பித்தார் டக்றர்.

இந்தச் சிற்பியின்பெயர் இராஜன். கமலா இவன்தங்கை. இராஜனின் தந்தையும் ஒருசிற்பிதான். அதிகம் புகழ்பெற்று விளங்காவிட்டாலும் உணவு, துணிக்குப் பஞ்சமில்லாது சம்பாதித்துக்கொண்டிருந்தார் அவர். இராஜனுக்குச் சிறுவயதிலிருந்தே சிற்பக்கலையில் அபாரமோகம். அவனுக்கு எட்டுவயது நடக்கும்பொழுதே உளிபிடிக்க ஆரம்பித்துவிட்டான். உலகம் என்னும் அகன்றசமுத்திரத்தில் உல்லாசமாகச் சென்றுகொண்டிருந்த அவர்களின் வாழ்க்கைப்படகு திடீரென ஒருகற்பாறையில் மோதியது. இராஜனுக்குப் பதினைந்துவயது நடக்கையில் ஒருவர்பின்ஒருவராக அவன் பெற்றோர் கலறுவுக்குப் பலியாயினர். அப்பொழுது கமலாவுக்கு வயதுஎட்டு. உறவினர் என்று சொல்லிக்கொள்ள ஒருவருமில்லை அவர்களுக்கு. ஆகையால், கமலாவைக் கையில்பிடித்துக்கொண்டு, இப்பரந்தஉலகில் தைரியமாகத் தன்வாழ்க்கைப்படகைத் தள்ளிச்செல்ல ஆரம்பித்தான் தனியாக. அவளது கபடற்றபேச்சிலும், குறுநகையிலும் தன்பெற்ருேரை இழந்த துன்பத்தைமறந்து வாழ்ந்துவந்தான் அவன். அவளே அவனுக்குச் செல்வம், இன்பம், ஆறுதல், உலகம்எல்லாம்.

தனது தகப்பனுர் விட்டுப்போன ஒரேசொத்தான ஒருசிறுவீட்டில் சிற்பவேலையைத் தொடர்ந்துசெய்து, அதன்மூலம்வரும் சொற்பவருவாயைக்கொண்டு தன்தங்கையைக் கவலைதெரியாது வளர்த்துவந்தான். எத்தனையோ தடவைகளில் தனக்கு உணவில்லாதபொழுதும், எப்படியாவதுபாடுபட்டுச் சம்பாதித்துத் தனதுதங்கையின் பசியைப் போக்கியிருக்கிறுன். பண்டிகையின்போது தனக்குச்சட்டையே இல்லாதிருந்தாலும், அவளுக்குப் பட்டுப்பாவாடை, சட்டைவாங்கத் தவறமாட்டான். 'நாம்தான் படிக்கமுடியவில்லை, அவளாவது படிக்கட்டும்' என்று அவளைப் பள்ளியில்சேர்த்துப் படிக்கவும்வைத்தான்.

வருடங்கள் உருண்டோடின. கமலா ஒரு யௌவனப்பெண்ணுகிப் பூரணபொலிவுற்று விளங்கினுள். இயற்கைஅன்னை தன் அழகினைஎல்லாம் அள்ளிச் சொரிந்திருந்தாள் அவள்மீது. அவளைப் பார்க்கும்போதெல்லாம் இராஜனதுஉள்ளத்தில் உவகைபொங்கும். சிறுவயதில் உலகம்தெரியாது வளர்ந்தஅவள், இப்பொழுதுதான் தனதுஅண்ணன் தன்மீது கொண்டுள்ள மட்டற்ற அன்பையும், தன்னைச்சந்தோஷமாக வளர்க்க அவன்படும்கஷ்டத்தையும் உணர்ந்தாள். அவளது இளம்உள்ளத்தில் நன்றி ஊற்றெடுத்து அன்புக்கடலாக மாறியது. ஒருவரைஒருவர் உணர்ந்துகொண்ட அவர்கள் அன்புக்கயிற்ருல் அறுக்கமுடியாதபடி பிணைக்கப்பட்டனர். அவளது வளர்ச்சியைக்கண்டு மகிழ்ச்சிகொண்ட இராஜனின் மனதில் அவளைச்சீக்கிரம் ஒருநல்லஇடத்தில் கல்யாணம்செய்து கொடுக்க வேண்டுமே என்றகவலையும் எழுந்தது. ஆனுல், கல்யாணம்செய்தால் அவள் தன்னைவிட்டுப் பிரிந்துவிடுவாள்என்று எண்ணும்பொழுது அவன் இதயத்தை யாரோ பிழிந்தெடுப்பதுபோன்ற உணர்ச்சிஏற்பட்டது.

(தொடரும்)

# ஆத்துமத்தின் ஞானசஞ்சீவி

(சி. எஸ். நாயகம், ஸ்ரேஷன்மாஸ்றர், கெம்பாஸ்—மலாயா.)

## 2. ஞானத்தேட்டம்

அதாவது, ஆண்டவரிடத்திலே திரவியவானுயிருத்தல். இதைப்பற்றிய உவமை பின்வருமாறு: "ஐஸ்வரியமுள்ள ஒருவனுடைய காணிபூமி ஏராளமானபலனைத் தந்தது. அதனுல் அவன் தனக்குள் யோசித்துக்கொண்டு நான்என்னசெய்வேன்? என் தானியங்களைச் சேகரித்துவைக்க எனக்கு இடமில்லையே. ஆகையால், நான் இப்படிச்செய்வேன். என்களஞ்சியங்களை இடித்து அதிகம் பெரிதாகக்கட்டி எனக்குவிளைந்த பலனெல்லாவற்றையும், என் ஆஸ்தியையும் அதில்சேர்த்துவைத்து, என் ஆத்துமத்தைநோக்கி: என் ஆத்துமமே! அநேகம்வருடங்களுக்குப்போதிய திரளான சம்பத்து உனக்குச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; ஆகையால் நீ இளைப்பாறி, உண்டுகுடித்து, விருந்தாடு என்பேன்" என்றுன்.

அப்பொழுது ஆண்டவர் அவனை நோக்கி: "மூடனே! இந்தஇராத்திரியில்தானே உன்உயிரை உன்னிடத்தினின்று வாங்குவார்களே! அப்போது நீதேடியவைகள் யாருடையனவாகும்?" (லூக். 12: 16-21) என்ருர். ஆகையால், ஒருவன் ஆண்டவரிடத்தில் திரவியவானுயிராமல் தனக்கு இவ்வுலகபொக்ஷத்தைச் சேர்த்துவைக்கிறவன் இவ்விதமாயிருக்கிறுன். எனவே, இந்தஉவமையின் கருத்துப்படி, நாம் இவ்வுலகசெல்வங்களை ஆவலுடன் நாடித்தேடிக்குவித்து, அவற்றிலே மகிழ்ச்சியும், திருப்தியும் கொண்டிராமல், ஞானசெல்வங்களை ஆவலாய்த்தேடி அருந்திவருந்திக்குவித்து, ஆண்டவரிடத்திலேயே திரவியவான்களாயிருக்கவேண்டும். ஆனுல், நாம் இதற்குமாருய் என்னசெய்கிறேம்? உலகசெல்வங்களைத் தேடுவதிலும், உலக இன்ப சுகபோகங்களை அனுபவிப்பதிலும் தீராததாகம் கொண்டவர்களாய், நீதிநியாயம், பழிபாவம், தயைதாட்சணியம் பார்க்கிறேமில்லை. ஊண்உறக்கமின்றி அலைந்தலைகிறேம். அவற்றிற்காக எத்தகைய தந்திரோபாயங்களையும் கையாடப் பின்வாங்குவதில்லை. ஆனுல், ஞானச்செல்வங்களைத் தேடுவதற்கோ ஒருவகையான வெதுவெதுப்பும், வெறுப்பும், சோர்வும், அசட்டையுமேயன்றி வேறில்லை. உலகசெல்வங்களைத் தேடவேண்டாமென்று நமது ஆண்டவர் சொல்லவில்லை. இவைகள் இல்லாவிடின் நாம்உலகில் சீவிக்கமுடியாதென்பதை ஆண்டவர் நன்ருய் அறிவார்.

ஆனுல், இவற்றையும் நாம்நீதியோடு தேடவேண்டும்என்பதே அவர்சித்தம். இவ்விதம் சற்பாத்திரமுறையில்தேடிய அநித்திய உலகபொருட்களைக் கொண்டு ஞானநன்மைகளைச் சம்பாதிக்கவேண்டுமென அவர் விரும்பியே, "நீங்கள் மரணமடையும்போது நித்தியகூடாரங்களில் உங்களை ஏற்றுக்கொள்ளும்படிக்கு இவ்வுலக அநித்தியபொருள்களைக்கொண்டு உங்களுக்குச் சிநேகிதர்களைச் சம்பாதித்துக்கொள்ளுங்கள்" (லூக். 16:9) என்று திருவுளம்பற்றியிருக்கிருர். இந்த உலகசெல்வங்களை—நன்மைகளை நாம் கண்டடையவும், அனுபவிக்கவும் ஓர் குறுக்குப்பாதை உண்டு. அதுஎன்ன? சர்வேசுரனை எல்லாவற்றிற்கும்மேலாக முன்னுக்குத்தேடுவதே! "முந்தமுந்தச் சர்வேசுரனுடையஇராச்சியத்தையும், அவருடையநீதியையும் தேடுங்கள்; அப்போது இவைகள் (உலக நன்மைகள்) எல்லாம் உங்களுக்குக் கூட்டிச்சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத். 7 : 33) என்று அவர்வசனித்திருக்கிருர்.

## 3. கணக்கு

"உன்னைப்பற்றி நான் இவ்விதம் கேள்விப்படுகிறதென்ன? உன்விசாரிப்பின்கணக்கை ஒப்புவி" (லூக். 16 : 2.) என்பது இன்னுேர்உவமை. இந்த உவமையின்படி நாமெல்லோரும் எந்தெந்த அந்தஸ்தில் இருக்கிறேமோ, அந்தந்தஅந்தஸ்தில் இருந்துகொண்டே சர்வேசுரனுடைய உக்கிராணக்காரராய் இருக்கிறேம். அவர் நம்மிடத்தில் ஒப்படைத்த ஆத்துமாக்கள்சரி, ஞானநன்மைகள்சரி, உலகநன்மைகள் சரி, இவைகளெல்லாம் மோட்சமுத்துகள்—பரலோகதிரவியங்கள். இந்தத் தலேந்துகளை நாம் தக்கமுறையாய் விருத்திசெய்து கடைசிநாளில் சதத்தோடு கணக்குக்கொடுக்க வேண்டிவரும். "பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலன்றி அவன்ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்" என்னும் தேவவாக்குப்படி, நாம் அனுபவிப்பதெல்லாம் தேவனின்கொடைகள். ஒருநாளைக்கு நாம் இவைகளின்பேரில், இந்தநம்பிக்கைச் சொத்துகளின்பேரில் தேவ சிம்மாசனத்தின்முன்பாக நடுநடுங்கிக்கொண்டு கணக்குக்கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறேம்.

நமது ஆத்துமத்தையும், நம்மிடம் நம்பிஒப்படைக்கப்பட்ட சகலத்தையும் ஒன்றையும் இழந்துபோகாமல் நாம் வட்டிமுதலோடு கணக்குக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேம். இந்தக் கணக்குவழக்கிலே கடந்தகாலத்தில் நாம் எவ்வளவோபிழைகளை மதிகேடாகவோ, தெரிந்துதெரியாமலோ விட்டிருக்கிறேமென்பதை மறுப்பார் எவருமில்லை. இவைகளை நிரைப்பிடித்து இனிச் சரிப்போக்குவதற்காகவே இந்தக்காலஎல்லை கொடுபட்டிருப்பதினுல், அந்த அநீதகாரியஸ்தன் மதியூகமாய் நடந்துகொண்டதுபோல நாமும்நடந்துகொள்ள வருந்தவேண்டும். அப்பொழுது, "சவ்வாஸ், நம்பிக்கையுள்ளஊழியனே! உனதுஎசமானுடைய சந்தோஷத்துள் பிரவேசி" (மத். 25 : 21.) என்னும் கர்த்தரின் புகழ்ச்சிமொழிக்கு ஆளாவோம். எனவே, இந்தப்புதுஆண்டில் நமது சீவியபுத்தகத்தில் ஓர்புதுஒற்றையைத் திறந்து புண்ணியங்களைக்கொண்ட தங்கமையால் நமதுகணக்குகளை முடிக்கவருந்துவோம்.

## 4. மரணம்

"இதோ திருடனைப்போல் வருவேன்" (காட்சி. 16 : 15.). "ஆகையால், எந்தநேரமும் விழிப்பாயிருங்கள். ஏனெனில், உங்கள்ஆண்டவர் எந்நேரத்தில்வருவாரென்று நீங்கள்அறியீர்கள். திருடன் எந்நேரம்வருவானென்று வீட்டெசமான் அறிந்திருப்பானுகில் மெய்யாகவே விழித்திருந்து தன்வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிந்துகொள்ளுங்கள். அப்படியேநீங்களும் ஆயத்தமாயிருங்கள். தன்குடும்பத்தாருக்குத் தக்கவேளையில் ஆகாரம்கொடுக்கும்படி அவர்களுக்கு எசமான்ஏற்படுத்திய நம்பிக்கையும், விவேகமுமுள்ள ஊழியனைப்போலிருங்கள். அவனுடையஎசமான் வரும்போது இவ்விதம் தன்கடமையைச் செய்துகொண்டிருக்கிறவனுக எந்தஊழியனைக் காண்பானே, அந்த ஊழியனே பாக்கியவான். எசமான் தன்சர்வ சம்பத்துக்கள்மேலும் அவனைக்காரியஸ்தனுக ஏற்படுத்துவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆனுல், அந்தஊழியன் துஷ்டனுயிருந்து தன்னிடம்ஒப்படைத்தவர்களை இம்சித்துஅடிக்கவும், குத்தவும், வெட்டவும்தொடங்கி, வெறியரோடுபுசித்தும், குடித்துமிருப்பானுகில் அவன்நினையாதநாளிலும்,

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### நன்றியறிதலின் ஆலயம்

மரியன்னையின் புனிதவருடத்திலே கத்தோலிக்கபெண்மணிகள் அடைந்துகொண்ட சகலமான உபகாரங்கள், அனுகூலங்களுக்கெல்லாம் நன்றியறிதல் தெரிவிக்குமுகமாகவும், மாதாவின்வருட ஞாபகார்த்தமாகவும் ரோமாபுரியில் கட்டப்படவிருக்கும் புதிய கோவில்ஒன்றுக்கு உலகமுழுவதிலுமுள்ள கத்தோலிக்க பெண்மணிகள் பணம் உபகரிக்குமாறு அழைக்கப்படவேண்டுமென்ற ஆலோசனையைப் பரிசுத்தபாப்பரசர் அங்கீகரித்து, அதற்குத் தமதுஆசியையும் அளித்திருக்கின்றார். இந்தக்கோவிலோடு இணைந்த தாய்ப் பெண்மணிகளின்சேமத்துக்கும், அவர்களுக்குச் சகாயஞ் செய்வதற்குமாக ஓர்ஸ்தாபனம் அமைக்கப்படும். இந்த ஆலோசனையைத் தெரிவித்து ரோமாபுரியிலுள்ள பெண்மணிகளின் குழுஒன்று பாப்பரசருக்கு அனுப்பியசெய்தியிலே, அரசியான தேவதாயாரின்திருநாளைப் பிரகடனஞ்செய்ததையிட்டுத் தங்கள்நன்றியறிதலை அவருக்குத் தெரிவித்திருக்கின்றது. இந்தப்புதியகோவிலுக்குப் பணம் உபகரிக்குமாறு உலகிலுள்ள கத்தோலிக்க பெண்மணிகள்யாவரும் தற்போது கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

### இரத்தஞ் சிந்திய சுரூபம்

பிரான்சிலே நீஸ்நகருக்குச் சமீபமான என்றெலோஎனும் சிறியபட்டினத்திலே ஹொட்டல்ஒன்றின் சொந்தக்காரரான ஜீன் சல்வாதே என்பவர் 1953-ம ஆண்டு மார்கழிமாதம் 27-ந்திகதியன்று சூதாட்டசீட்டு விளையாடியபோது தோல்வியடைந்தார். அதனால்அவர் கோபமடைந்தவராய்த் தனக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவருமென நம்பி, விலை கொடுத்து வாங்கிக் கொண்டுபோய்த் தன் பக்கத்தில்வைத்திருந்த சுரூபம் ஒன்றை ஆற்ருது வெளியே நிலத்தில் வீசிவிடலாயினர். மறுநாள் அந்தச் சுரூபத்தை அவர் போய்ப் பார்த்தபோது, சுட்டுவிரலிலிருந்து இரத்தம் பெருகுவதைக் கவனித்தார். அதுமுதல் அந்தமுரிந்தவிரல் இரத்தத்தினல் ஈரப்பசுமையுடையதாய்இருந்துவரலானது.

நீஸ்நகரைச்சேர்ந்த டக்றர் திரோப்பினிஅவர்கள் எக்ஸ்-றே கொண்டு அந்தச் சுரூபத்தைப் பரிசோதித்து, அதிலே தந்திரசெயலுக்கான அறிகுறிகள் ஒன்றையும் தாம்காணவில்லையென உறுதிமொழிபகர்ந்தார். "இரத்தம் உறையவில்லை; என்னைப் பொறுத்தமட்டிலே இதுவிளக்கமுடியாததாய் இருக்கிறது" என்று கூறலாயினர். இதிலும் அதிகம் விசேஷப்பட்டது யாதெனில், திவ்வியகர்த்தரின் பேரான திருப்பரிவட்டசாயலையொத்ததாய் மரத்தில் செதுக்கப்பட்ட ஓர்மனிதசிரமும் எக்ஸ்-றே பரிசோதனையின்போது அதில் கண்டறியப்பட்டமையே. இவ்விரு புதுமைகளுடன் நிகழ்ந்த மற்றோர் அற்புதம் யாதெனில், இச்சம்பவம் நிகழ்ந்து சிலநாட்களுள் ஜீன் சால்வாதே என்பவர் மனந்திரும்பித் தனது முன்னோரின் வேதவிசுவாசத்தைக் கடைப்பிடித்து முதல்நன்மைபெற்றுக்கொண்டதே.

பிரான்சிய திருச்சபை அதிகாரிகள் இந்தச்சுரூபத்தைப்பற்றி இன்னுமே யாதொன்றும் தெரிவிக்கவில்லை. ஆனல், இது பரீஸிலும், மற்றும் பிரான்சியநகரங்களிலும் காட்சிக்குவைக்கப் படவிருக்கிறது. இந்தச்சுரூபம் "என்றெலோவின் திருக்கன்னிகை"என்று அழைக்கப்பட்டபோதிலும், அது தனதுமுழந்தாளில் குழந்தை மரியாயுடன் கூடிய மாதாவின் திருத்தாயாரான அர்ச். அன்னம்மாளின் சுரூபமேயாகும்.

### பர்மாஅரசாங்கமும் குடும்பசெபமும்

குடும்ப செபமாலைப் படையணியின் அப்போஸ்தலரான வண. பற்றிக் பெயிற்றன் சுவாமியார் குடும்பங்களை ஒருங்கு சேர்ப்பதிலும், அதனல் சமூகத்தினதும், தேசத்தினதும், உலகத்தினதும் சமாதானத்துக்குத் துணைசெய்வதிலும் ஆற்றிவரும் அரிய சேவைகளைப் பாராட்டி, பர்மாவிலே அவரது செபமாலைப்படையணி முடிவில் அவரைக் கௌரவிக்குமாறு நடத்தப்பட்ட பிரியாவிடை விருந்துச் செலவுமுழுவதையும் பர்மாஅரசாங்கமே பொறுத்திருக்கின்றது. பர்மியபாஷையில் வெளிவருவதும், அந்நாட்டிலே மிகப்பெருந்தொகையான பிரதிகளை வெளியிடுவதுமான "பாமா கிற்" எனும் பத்திரிகை சென்றமார்கழி 21-ந் திகதி பிரசுரமான தனதுஇதழின் ஆசிரியவசனத்திலே செபமாலைப் படையணியின் கருத்துகளை மனப்பூர்வமாக ஆதரித்து எழுதியிருக்கின்றது. புத்தசமயத்தவர்களுக்குச் சொந்தமான "பர்மன்" எனும் ஆங்கில பாஷா பத்திரிகையும் அவ்வாறே அங்குநிகழ்ந்த செபமாலைப் படையணி மகாவைபவத்தைப் புகழ்ந்து எழுதலாயிற்று.

### சமயபோராட்ட நிறுத்தம்

செக்கோசிலவாகிய நாட்டின் கம்யூனிஸ்த பிரதமரான விலியம் சிரொக்கிஎன்பவர் சமீபத்தில் மஸ்கோநகர்சென்று ஓர் மகாநாடுகூடிவிட்டுத் திரும்பியதும், திருச்சபையை எதிர்த்துத் தனது கம்யூனிஸ்தஆட்சி நடத்திவரும் சமயபோராட்டத்தைச் சிறிதுகாலத்துக்கு நிறுத்திவிடும்படி ஆஞ்ஞாபித்திருக்கிறாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. நத்தால்விழா காலத்தில் —விசேஷமாய்க் கிராமப்புறங்களிலே சமய கொண்டாட்டங்களுக்கு விக்கினஞ்செய்ய வேண்டாமென்று அவர் அரசாங்க அதிகாரிகளையும், கம்யூனிஸ்த அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ளலாயினர். தனது சமய விரோத எதிர்ப்பைக் கொண்டு நடத்துவதை இப்போதைக்கு நிறுத்திவைக்கும்படி கம்யூனிஸ்த இளைஞர்கள் ஸ்தாபனத்துக்கும் உத்தரவு பிறந்திருக்கிறது. கம்யூனிஸத்தின் மட்டிலே இருந்துவரும் சமயஎதிர்ப்பைச் சாந்தப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காகவே சோவியற்பிரதமரான மலென்கவ்என்பவர் செக்கோசிலவாகிய பிரதமரை மஸ்கோவுக்கு அழைத்திருந்தாரென அறிவிக்கப்படுகிறது.

### போலாந்தின் பேராலயம்

போலாந்தின் மிகப்பெரிய ஆலயம் மேல்சிலேசியாவின் தலைப்பட்டணமும், கரிச்சுரங்கப்பகுதியின் மத்திய தானமுமாகிய காற்ரோலிஸ்நகரில் இவ்வாண்டு ஐப்பசிமாதம் அபிஷேகஞ்செய்யப்பட விருக்கிறது. இந்தப்பட்டணம் 1953-ம் ஆண்டு ஸ்ராலின்கிருட் எனப் புதுநாமங்கொடுத்து அழைக்கப்பட்டபோதிலும், அங்குள்ள சுரங்கத் தொழிலாளிகள் கம்யூனிஸ்த ஆட்சியை வைராக்கியத்துடன் பின்பற்றுகிறவர்களாய் இருந்தபோதிலும் கிறீஸ்துராசாவின் பேரால் இந்தப்பாரிய ஆசனக் கோவிலைக் கட்டியெழுப்புவதற்குத்தேவையான பணததை வருடக்கணக்கிலே சேகரித்துக் கொடுத்தார்கள். காற்ரோலிஸ் மேற்றிராசனம் அடியிடப்பட்ட சிறிதுகாலத்தின்பின் அதாவது 1920-ம்ஆண்டு இந்தஆசனக்கோவில்வேலை ஆரம்பிக்கப் படலாயிற்று.

### கருதினலின் நான்காவது விஜயம்

நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன்ஆண்டவர் தொடர்ந்து நான்காவதுவருடமாக இம்முறையும் கோறியாவிலே சவூல் நகருக்கும், கம்யூனிஸ்த எல்லைக்கும் இடைப்பட்ட ஓர்பகுதியில் தமது நத்தால்பூசைகளை நிறைவேற்றினர். அங்கு போகையில் அவர்தம்முடன் 50,000 வேதப்படங்களும், 25,000 பதக்கங்கள், செபமாலைகள், மற்றும் வேதச் சாமான்களும், 1954-ம் ஆண்டின் நோட்றேடாம் உதைபந்தாட்டப்போட்டி விளையாட்டுகளின் சினிமாப் படங்களும், 1,00,000 சிகறெற்றுகளும் கொண்டுசென்றார். சவூல்நகரில் கோறியமக்கள் ஓர் பொதுவரவேற்பு அளித்தார்கள். அவர் ஏழாவது காலாட்படைமுகாமில் திவ்விய பூசை நிறைவேற்றிய மைதானத்தை யுத்தகாலத்தில் பிரயோகித்த 80 கோடி மெழுகுவர்த்திப்பிரகாச பலமுள்ள இரு ஒளிவெள்ளக்கதிர்கள் பிரபைகாலிக்கச்செய்தன. பிந்தஅவர் சுதந்திர கோறியாவின் ஜனதிபதியைச் சந்தித்துப் பலவிடங்களையும் தரிசிக்கலாயினர்.

### வாதிக்கப்பட்ட குருவானவர்

சீனக் கம்யூனிஸ்தர்களால் மூன்றுவருடங்களுக்கு மேற்படச் சிறைவைக்கப்பட்டிருந்து சென்றமாதம் விடுதலைசெய்யப்பெற்றவரான வண. அல்பேட் சியெர்எனும் பெல்ஜியகுருவானவர் கொடூரவேதனைக்குள்ளாகி முதுகுமுரிந்தவராய் ஆறுமாதகாலம் தாம்இருந்துவந்த சிறைச்சாலைச் சிற்றறையில் யாதாமோர்உதவியுமற்றுத் தவிக்கலாயினர். வண. சியெர்சுவாமியார் 1951-ம் ஆண்டின் ஆவணிமாதத்திலே 18சீனக்கத்தோலிக்கருடன் கைதுசெய்யப்பெற்ற 14பிறதேசக் கத்தோலிக்க மிஷனரிமாருள் ஒருவர். பீக்கிங் நகரிலுள்ள ரிசாலோ ரிசிச் சிறைச்சாலையிலே இவருடன்ஓர் அமெரிக்க குரவரான வண. ஹறல்ட் ரிக்னிசுவாமியாரும், மற்றும் பன்னிருசீனக்குருமாரும் இருந்தார்கள். அச்சிறைச்சாலையில் இருந்துவந்த 250 அரசியற்கைதிகளில் 40 விகிதத்துக்கு மேற்பட்டவர்கள் கத்தோலிக்கரெனச் சுவாமியார் கூறுகின்றார்.

### அரசுகளுக்கு அபயமிடுகின்றார்

இந்தோ-சீனவிலே கம்யூனிஸ்த வியெற்மின் நாட்டில் கம்யூனிஸ்தஅதிகாரிகள் கத்தோலிக்கமக்களுக்குச் செய்துவருகின்ற இம்சைகளும, நிஷ்டூரங்களும் இம்மட்டன்று. அதனல் "ஜெனிவாநகர் உடன்படிக்கைகளை மதித்துநடக்கும்படி செய்யவும், கத்தோலிக்கரைத் துன்புறுத்துவதைநிறுத்தவுமாக இந்தோ-சீனவில் யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்த ஜெனிவாப்பேச்சுகளில் கலந்துகொண்ட ஒன்பது அரசுகளையும் மத்தியட்சத்துக்குவருமாறு தெற்கு வியெற்நாமின்பிரதமரான நிகோ டின் டியெம் அவர்கள் அழைத்திருக்கிறாரெனச் சைகோன் நகரிலிருந்து பிரான்சிய பத்திரிகைச் செய்திஸ்தாபனம் அறிக்கையிட்டிருக்கிறது" எனச் சென்ற ஞாயிற்றுக்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. சுதந்திரஉலகத்துக்கும், கிறீஸ்துவஉலகத்துக்கும் அனுப்பியிருக்கும் ஓர் செய்தியில் ஜெனிவா உடன்படிக்கைகளை உதாசீனமாக மீறிக்கொண்டிருப்பதாய் வியெற்மின் அரசாங்கத்தின் மேல் அவர் குற்றம்பாரித்திருக்கின்றார்.

---

● ஐரோப்பாவிலே சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கம்யூனிஸ்த குட்டிநாடுகளில் ருமேனியாவும் ஒன்ருகும். அது மக்கள்விடுதலைபெற்ற நாடென்று சொல்லப்பட்டபோதிலும் அங்குஇருந்துவந்த பாப்பரசரின் ஸ்தானீகர் நாடுகடத்தப்பட்டிருக்கின்றார். 12 மேற்றிராணிமாரும், 750 குருமார், கன்னியாஸ்திரிமாரும் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர். 55 பேர் கொலைசெய்யப்பட்டிருக்கின்றனர். சகல கிறீஸ்தவ பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. நூற்றுக்கு 85விகிதமான சந்நியாச, கன்னிகாமடங்கள் ஒழிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

**எட்டாந்தரக் கணிதங்கள்**
(By J. V. Gunaratnam)

வீசகணிதம் Pt. III.
வெளியாகிவிட்டது.

எண்கணிதம் Std. VIII.
வெளியாகிவிட்டது

கேத்திரகணிதம் Pt. II.
(ஏழாம், எட்டாந்தரங்களுக்கு)
31-3-55 இல் வெளிவரும்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


### தைமாதம்

பொதுக்கருத்து:— உள்நாட்டில் மக்களிடையே ஒற்றுமை வளருவதற்காக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— மலேயாளத்தில் கிறீஸ்தவர்களுக்குள்ளே ஒற்றுமையும், எண்ணிக்கையும் அதிகரிப்பதற்காக மன்றாடிக்கொள்வது.


சத்தியவேத
**பாதுகாவலன்**

1955-ம் ஆண்டு
தை மாதம் 27-ந் திகதி


## மாதரும் குடும்பசெலவும்

"ஆவதும்பெண்ணால், அழிவதும்பெண்ணால்" என்னும் அர்த்தபுஷ்டியுள்ள அருமையானசுலோகத்தை எமதுநாட்டுப்பெண்மணிகள் ஆராய்வாகச் சிந்தித்துத் தங்கள்குடும்பவாழ்க்கையில் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவார்களாயின் அதனால் வரக்கூடிய நன்மைகள் அனந்தமாகும். இந்தச்சுலோகத்தை மற்றோர்விதமாக எடுத்துக்கூறுகிறதாயின் வாழ்வும் பெண்ணால், தாழ்வும்பெண்ணாலென்று சொல்லிவிடலாம். ஆனால், இன்றைய உலகில் இதைப்பற்றிச் சிந்திப்பார் எத்தனைபேர்? கண்டதேகாட்சி, கொண்டதேகோலம் என்றவாறாய்ப் பணத்தைக்கண்டதே அதற்கோர் பயனற்றசெலவைக் கண்டுபிடித்து, ஆடம்பரமாய், கோலாகலமாய் வாழ்க்கைநடத்திக் கடைசியாக அன்னநடை நடக்கப்போய்த் தன்நடையுங் கெட்ட காகம்போன்று அவர்களும், அவர்கள் குடும்பங்களும் கெட்டுநொந்து குட்டிச்சுவராகிக்கொண்டு வருவதைக்காணுந்தோறும் உண்மைச்சமூக தொண்டர்கள் உள்ளம்வருந்துவது ஆச்சரியமன்று. இந்தப் பெண்களுக்கெல்லாம் அன்று சாவகச்சேரியில் நடைபெற்ற மாதர்சங்க மகாநாட்டு ஆரம்ப விழாவில் வடமாகாண அரசாங்கதலைவரின்பாரியார் திருமதி எம். ஸ்ரீகந்தா அவர்கள் கூறியபொன்மதியானது நன்மதிபுகட்டுமென நம்புகின்றோம். அவர்கூறியதாவது:

"தொட்டிலை ஆட்டுங்கையே உலகத்தை ஆளுங்கை" என்ற பழமொழிக்கு இலட்சியமாய் விளங்கும் அறிவும், ஆற்றலும் நிறைந்த மாதர்களாகிய நாம் கிராம முன்னேற்றத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்து பொதுநலசேவையில் திறம்படப்பணியாற்றுதற்குப் பழகிக்கொள்ள வேண்டும். நாளுக்குநாள், நிமிஷத்துக்கு நிமிஷம் சனப்பெருக்கம் அதிகரித்துக்கொண்டுவரும் இந்தக்காலத்தில் மாதர்களாகிய நாம் குடும்பசெலவுகளை எவ்வாறு கட்டுப்படுத்தி நடக்கவேண்டும் என்பதுபற்றிச் சற்றேசிந்திக்கவேண்டும். உணவுப்பொருட்களும் நாளுக்குநாள் விலையேறிக்கொண்டு வருகின்றன. உணவுநெருக்கடியை நிவிர்த்திசெய்வதற்கென நாம்ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டங்கள் வைத்து நடத்தவேண்டும். விலையுயர்ந்த சேலைகள், நகைகள் என்பனவற்றை ஆடம்பரமாக அணியஆசியாது, எளியவாழ்க்கை நடததப் பழகிக்கொள்ள வேண்டும். கோழிவளர்ப்பு, பால்மாட்டுவளர்ப்பு முதலியவற்றில் பெண்களே பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். பெண்களின் ஆடம்பர வாழ்க்கைக்குப் பணம்போதாதென நினைத்து இருநூறு, முந்நூறுரூபா சம்பளமெடுக்கும் ஆடவர்கள் விவாகஞ்செய்யப் பின்னிடுகின்றார்கள். பெண்கள்தான் நாட்டின் முன்னேற்றத்திற்குச் சீவநாடிகள். அவர்களிடம் தெய்வபக்தி இருக்கவேண்டும். தெய்வபக்தி இருந்தால் ஞானம்உண்டாகும். ஞானம்உண்டாக ஆசைஅடங்கும். ஆசைஅடங்கவே ஆடம்பரவாழ்க்கையில் வெறுப்புண்டாகும். மாதர்சங்கங்கள் பெயரளவில் மாத்திரம்நில்லாது செயலிலும்இறங்கிப் பொருளாதார விருத்திக்கு உழைக்கவேண்டும். பெண்கள் குடிசைக் கைத்தொழில்கள் செய்வதிலும், வீட்டுத் தோட்டங்கள் செய்வதிலும் ஒருங்குசேர்ந்து ஒத்துழைத்து ஈடுபட்டால் நமதுசமூகம் முன்னேறும். கிராமப் பொருளாதார விருத்தியில்தான் நாட்டின்முன்னேற்றம் தங்கியுள்ளது. ஆகையால் நீங்கள் எல்லோரும் ஆடவர்களுடன் சேர்ந்து பொருளாதார விருத்திக்காகப்பாடுபடுவீர்களென நம்புகின்றேன்."

குடும்ப கட்டுப்பாடு முதலாம் குணபேதமானகட்டுப்பாடுகளைத் தாண்டிப்பிடித்து, இறங்காத் துறையில் இறங்கிக் குடும்பங்களுக்கும், சமூகத்துக்கும் இடும்பைகளை உண்டுபண்ண முனைந்துநிற்பவர்கள் குடும்பசெலவுக் கட்டுப்பாடு, ஆடம்பர வாழ்க்கைக்கட்டுப்பாடு, அனவசிய செலவுக்கட்டுப்பாடு ஆதியாம் சீரியதுறைகளில் இறங்கி— குடும்பங்களின் பொருளாதார விருத்திக்கான சிறந்தமுறைகளில்இறங்கி-பெயரளவில்மாத்திரமல்லச் செயலளவிலும்இறங்கிப் பணியாற்றி வருவார்களானல் எமதுநாடு சுபீட்சமெய்திப் பொருளாதார சுதந்திரத்தையும்பெற்று இன்புற்றுவாழுமன்றோ! முள்ளைமுள்ளாலே எடுப்பதுபோன்று மாதர்களே— மாதர்சங்கங்களே மாதர்களின் நல்வாழ்வுக்காகச் சரிவரஉழைக்கத் தொடங்குமிடத்துக் குடும்பங்கள் சிறக்க, சமூகங்கள் சிறக்க, அதனல் நாடும்சிறக்குமன்றோ!

# வத்திக்கான் செய்திகள்

பரிசுத்தபாப்பரசர் கடந்த 1954-ம் ஆண்டிலே இருமுறை அபாயகரமாக நோய்கண்டிருந்தபோதிலும் 54 சொற்பொழிவுகளையும், வானொலிச்செய்திகளையும ஆயத்தப் படுத்தியிருக்கிறாரென வத்திக்கானிலிருந்து அறிவிக்கப் பட்டிருக்கிறது. அவற்றிலே இத்தாலியபாஷையில் 15. பிரான்சிய பாஷையில் 23. ஸ்பானிய பாஷையில் 8. ஆங்கிலபாஷையில் 3. ஜேர்மன் பாஷையில் 2. லத்தீன்பாஷையில் 2. போர்த்துக்கேயபாஷையில் 1. அன்றியும் அவர் விசேஷ சந்தர்ப்பங்களிலே சோபன வாழ்த்துகளும், நல்லாசிகளும் தெரிவித்து அனுப்பிவைத்துள்ள எண்ணிறந்த திருமுகங்களைத்தவிர, நான்கு நிருபங்களையும் விடுத்திருக்கின்றார்.

* * *

மேலும் அவர் சென்றஆண்டிலே சுமார் 17,500 பேரை வரவேற்று 185 பிரத்தியேக, விசேஷபேட்டிகளும், சுமார் 1,60,000 பேருக்குச் சாதாரணபேட்டிகளும் அருளியிருக்கின்றார். இன்னும் அவ்வாண்டிலே அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூட்டும்திருவைபவங்கள் ஆறும், முத்திப்பேறுபெற்றபட்டம்சூட்டும் திருவைபவங்கள் மூன்றும் நடைபெற்றிருக்கின்றன. அவ்வருடத்தின் மற்றோர்பிரஸ்தாபசம்பவம், அரசியான தேவதாயாரின் திருநாள் வருடந்தோறும் வைகாசிமாதம் 31-ந்திகதியன்று கொண்டாடப்படவேண்டுமெனப் பிரகடனஞ் செய்யப் பெற்றமையே. இன்னும் அவ்வருடத்தில் பரிசுத்த ஸ்தானத்தினிடமாக நியமனஞ் செய்து அனுப்பிவைக்கப்பட்ட 12ஸ்தானீகர்களும், 4 பிரதிநிதிகளும் பரிசுத்தபிதாவிடம் தங்கள் நியமன அதிகாரப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள்.

* * *

இம்மாதம் 12-ந் திகதி புதன்கிழமை பரிசுத்தபாப்பரசர் பிரான்சிய பிரதமரான எம். மென்டெஸ் - பிரான்ஸ் அவர்களை வரவேற்றுப் பேட்டியளித்தார். இந்தப்பேட்டியையிட்டுப் பிரதமர் இத்தாலிய அரசாங்க தலைவர்களுடன் நடத்திவந்த சம்பாஷணைகளை இடையிலே நிறுத்தவேண்டியவரானர். இந்தப்பேட்டியை ஒழுங்குபண்ணியவர் வத்திக்கானிடமாக இருந்துவருகின்ற பிரான்சிய ஸ்தானீகரே. சென்ற மார்கழிமாதத் தொடக்கத்தில் மூர்ச்சித்துவீழ்ந்தபிறகு பாப்பரசர் முதன்முதலாகவரவேற்ற முதற்தரிசகர் இவரே.

* * *

சென்ற நத்தால் சுபகாலத்தில் பாப்பரசரும், எகிப்தியபிரதமர் கர்னல் நாஸர் அவர்களும் ஒருவருக்கொருவர் நத்தால் - புதுவருடச் சோபன வாழ்த்துகள் அனுப்பி வைத்தார்கள். எகிப்திய பிரதமர் தமது சோபன வாழ்த்திலே, "இந்தநத்தால், புதுவருடச் சுபசந்தர்ப்பத்தில் பரிசுத்த பிதாவாகிய தங்கள் மாறாதஅன்புக்கும், பூரணசுகத்துக்குமாக எனது உத்தம நல்விருப்புகளை மகிழ்வுடன் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என அறிவித்திருந்தார். பாப்பரசர் அனுப்பிய பதிலில், "இந்த நத்தால், புதுவருட விழாக்களின் சுபசந்தர்ப்பத்திலே அதி உத்தம தங்கள்பணிவான நல்விருப்புகளைப் பரிவாய்ஏற்றுத் தமக்கும், தமது பெருந்தகைவாய்ந்த எகிப்திய மக்களுக்குமாக அவைகளை மனப்பூர்வமாகக் கடவுளுக்குச் சமர்ப்பிக்கின்றேன்" எனத் தெரிவித்துக்கொண்டார்.

* * *

பரிசுத்தஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற பிறநாடுகளின் ஸ்தானீகர்களும், இராசிய தூதுவர்களும் பின்வரும் புதுவருடப்பிறப்புச் செய்தியைப் பாப்பரசருக்கு அனுப்பிவைத்தார்கள் — "பரிசுத்த பிதாவே! 1955-ம் ஆண்டு பிறப்பதற்கு முந்தியநாளிலே பரிசுத்த ஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற இராசியஉறவுத்தூதுவர்கோஷ்டிகளின் தலைவர்களாகியநாம் எமக்கு அத்துணை அருமையும், மதித்தற்கரியதுமான தங்கள் சுகத்தைத் திரும்பவும் பூரணமாக அடைந்துகொள்ள வேண்டுமென்று நமக்குள்ள ஆசார உபசாரமும், ஆர்வமுமிக்க விருப்புகளைத் தெரிவிக்க ஆவல் கொள்ளுகின்றோம். தங்கள் கருத்துகளுக்குச் செவி சாய்க்கும்படியும், உலகசமாதானத்துக்கும், சமயசுதந்திரங்களின் திவ்விய பாதுகாப்புக்குமாகத் தாங்கள் எடுத்துவரும் பிரயத்தனங்களை ஆசீர்வதிக்கும்படியும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்" என்பதே. வழமையிலே பரிசுத்த பிதா புதுவருடத்தில் இவர்களுக்குத் தனித்தனியே பேட்டியளிப்பார். ஆனல், இம்முறை அவருக்குண்டான சுகத்தாழ்வையிட்டு இந்தப் பேட்டிகள் நிறுத்தப்படலாயின.

* * *

"பரிசுத்தபிதாவின்நிலைமை ஏறக்குறையச் சாமானியமாகிவிட்டதெனத் தற்போது கருதப்படலாம்" என்று அகநோய் வைத்தியத்திலே இத்தாலியில் முதன்மைவாய்ந்த நிபுணரான புறொபெசர் காஸ்பறினிஅவர்கள் தெரிவித்திருக்கின்றார். பூரணமாக ஓர்முறை பரிசோதனை செய்தபின், "அவர் தற்போது போலத் தொடர்ந்து குணமடைந்துகொண்டு வருவாரானல், மிதமிஞ்சி வேலைசெய்யாதிருப்பாரானல் குடற்பிதுக்கத்தைக் குணமாக்குவதற்குத் தேவைப்படும் சத்திரவைத்தியத்தை நிறுத்திவிடமுடியும்; அவருக்குப் பெரும்வேதனையைத்தந்த விக்கல்களைஉண்டுபண்ணியதும், மார்கழி 2-ந்திகதியன்று அவர்மூர்ச்சித்துவிழமுக்கியகாரணங்களில் ஒன்றாயிருந்ததுமான குடற்பிதுக்கந்தானும் அவரது வழமைக்குமாறான உடற்கூற்றின் தன்மையால் குணமடைந்து வருகிறதுஎன்பதற்கான அறிகுறிகளைக் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.க்கின்றது" என அவர்கூறியிருக்கின்றார்.

*   *   *

பாப்பரசர்நோய்கண்டு அபாயநிலைமைக்குள்ளாய் இருந்த காலத்திலே அவரது விக்கார் ஜெனறலான கருதினல் மிக்காரு ஆண்டவர் அவருக்குரிய திவ்வியபூசையில் சொல்லப்படவேண்டுமென்று விதித்திருந்த விசேஷ செபத்தை இப்போது நிறுத்திவிட்டிருக்கின்றார். தற்போது அதனிடமாகப் "பாப்பரசருக்குரிய" வழமையான செபமே குறிக்கப் பட்டிருக்கிறது. ஒருமாதத்துக்கு மேற்பட்டபிறகு பரிசுத்தபிதா புதன்கிழமையன்று தமது முதல்சாதாரண தரிசகரை—அதாவது பிராஞ்சியபிரதமர் எம். மென்டெஸ் பிரான்ஸ் அவர்களை வரவேற்றுப் பேட்டியளித்தார். அவர் தற்போது உடன் அபாய நிலைமை முழுவதிலுமிருந்து நீங்கிவிட்டார். ஆயினும்அவர் தமது முந்தியவாழ்க்கையின் பிரமிக்கத்தகும் ஊக்கத்தை மறுபடியும்கொண்டிருக்க முடியாதபோதிலும் இன்னும் அநேக வருடகாலம் உயிர்வாழ்ந்திருப்பாரென நம்பிக்கையாகச் சொல்லப்படுகிறது. பரிசுத்த பிதாவின் இரத்தாசயமும், சுவாசப்பைகளும் இன்னுமே இருந்துவரும் சிறந்த நிலைமையைவிட்டு டக்றர்மார் இப்போது திருப்தியடைந்திருக்கின்றனர். அவர் வத்திக்கான் தோட்டங்களில் ஏறக்குறைய யாதாமோர் தாபரமுமின்றித் தினமும் உலாவிவருகின்றார். ஆயினும் திவ்விய பூசைநிறைவேற்றப் போதியபலமற்றிருக்கின்றார்.

## கோவில் மணியை அடித்த சிங்கம்

ஆபிரிக்காவைச்சேர்ந்த தங்கனைக்காநாட்டிலே காட்டுமிருக வேட்டை நடைபெறும் ஷின்யன் பகுதியில் தொண்டாற்றிவருகின்ற மேரிநோல்சபை மிஷனரிமார் சமீபத்திலே தங்கள் கோவில்மணி அர்த்தசாமத்தில் யாரோஒருவரால் அடிபடத் தொடங்கியதே படுக்கையிலிருந்து பயப்பிராந்தியுடன் விழித்தெழுந்தனர். அவர்களில் வண. எட்வாட் மைக்கேர்க்கின் சுவாமியார் எழுந்துசென்று ஆராய்ந்து பார்த்தபோது, அந்தஆசாமி மணிக்கயிற்றைக் கடித்து இழுத்துக்கொண்டிருந்த ஓர்சிங்கமேயெனக் கண்டுகொண்டார். சிங்கம் விரைவில் கலைத்துவிடப்பட்டது; சோதித்துப் பார்த்தவிடத்து, மணிக்கயிறு மாமிசமணமுடையதாயிருக்கக் கண்டறியப்படலாயிற்று. இராப்போசனத்துக்கென்று அவர்களின் பணிப்பையன் புதிதாகக்கொன்ற ஓர்மிருகத்தைத் தயாரித்துக்கொண்டிருந்தபோது தான் திருந்தாதி மணியடிக்கப் பிந்திப்போனதாகநினைத்து ஓடிச்சென்று உணவு தயாரித்துக்கொண்டிருந்த கையாலேயே மணிக்கயிற்றை இழுத்தடித்தபோது அதில் மாமிசமணம் உண்டாயிற்று. அந்த மணம் சிங்கத்தின்நாசியில் தட்டிவிட்டது.



## சதாசகாயமாதா கோணம்

### தேவதாய் அன்பு

ஒருதாய் தன்அன்புக்குரிய குழந்தையில்வைக்கும் அன்புக்கு இணையான வேறொரு அன்பை இந்தஉலகத்தவர்களில் கண்டுகொள்ளமுடியுமா? அன்பு ஆழ்ந்தஇரகசியம் நிறைந்தது. அன்புகளுள்எல்லாம் மிகவுந்தூய, பரிசுத்தமான அன்பு ஒருதாயின் அன்பு. ஒருதாய் சீவிப்பதும், பாடுபடுவதும், கண்ணீர்சிந்துவதும், ஆனந்தங்கொள்வதும் தனதுசெல்வக் குழந்தையையிட்டல்லவா?

நான் ஒருதாய்என்று சொல்லக்கூடிய உன்னதமகத்துவத்தை அடைந்த ஒருஸ்திரிஅல்லாது வேறு எவரும் தாய்அன்பின் ஆழநீளத்தையும், விசாலத்தையும் சரிவர உணரவேமாட்டார்கள்.

ஒருதாயின்அன்பு எப்படிப்பட்டதென்று தாம் உணர்ந்துகொண்டதை எங்கள்ஆண்டவராகிய யேசுநாதசுவாமியே ஒருமுறை வெளியிட்டிருக்கிறார். கனேய அஞ்ஞானஸ்திரி ஒருத்தி ஆண்டவரைநோக்கித் தன்மகளுக்கு அவர் சுகங்கொடுக்க வேண்டுமென்று இரந்துகேட்டபொழுது, அவள் ஆண்டவருக்கு என்னசொன்னாள்? என் மகள்மேல் இரக்கமாயிரும்என்று கேட்டாளா? இல்லை. "என்மேல் இரக்கமாயிரும்; என்மகளைப் பிசாசு பிடித்து வதைக்கிறதே" என்றுதான் கேட்டாள். தன்மகள்படும் உபத்திரவங்கள், தான் படும்உபத்திரவங்கள் என்று உணர்ந்துகொண்ட படியாற்தான், தனதுவிசாலித்த அன்புக்கு இலக்காகஇருந்த தன்மகளின்வேதனைகள் தன்சொந்தவேதனைகள் எனப் பாவித்து "என்மேல்இரங்கும்"என்று ஆண்டவரைக்கேட்டாள். அவரும், அந்தத்தாய்அன்பில் அனுதாபங்கொண்டு அவளில்இரங்கினார்.

சாதாரணமான ஒருதாயின்அன்பு இவ்வளவுஆழமும், விசாலமும் உடையதாயிருந்தால, தேவதாயின் தாய்க்குரிய அன்பைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமா? அவவுடைய தாய்அன்புக்கு இணையான தாய்அன்பு உலகத்தில் முன் இருந்ததும்இல்லை, இனிமேல் இருக்கப்போவதுமில்லை.

தேவசுதனின்தாயாக இருக்க வேண்டுமெனக் கன்னி சுத்தமரியாயைச் சர்வேசுரன்சிருஷ்டித்தபோது, மரியம்மாள் தனதுதெய்வீககுமாரனைத் தக்கவிதமாய் நேசிப்பதற்குஏற்ற ஒரு இருதயத்தைக்கொடுத்தே அவவைச் சிருஷ்டித்தார். தேவசுதன்மட்டில் புரியவேண்டிய அன்பின்தொண்டுகள் எல்லாவற்றையும் பூரண—பொருத்தமானவிதமாகப் புரிவதற்குவேண்டிய வரங்களையும் தப்பாது கொடுத்தார். தேவமாதா ஒரு தாய்என்றமட்டிலே ஆண்டவர்மட்டில் செலுத்தியஅன்பு விசேஷித்த விசாலமுள்ளது. தேவமாதா நமக்குந்தாய் என்றமட்டில் அந்த அன்புக்கு நாமும்இலக்காக இருக்கிறோம்.

எங்கள் அவசியங்களிலே இந்தஉலகத்தில் ஒருஅன்புள்ள தாயைப்போலும் எமக்குஉதவிபுரிய யார்தான் உண்மையான ஆத்திரப்படுவார்கள்? வேறு யாரிடத்தில் நாம்நம்பிக்கையுடன் போவோம்? ஒருஅன்புள்ள தாய்என்றால் எல்லாவிதமான உதவிசகாயங்களும் புரியத் தாராளமனதுடன் முன்னுக்கு வருவாள் அல்லவா? தேவமாதாவுடைய வல்லமையைப்பற்றியும், அன்பைப்பற்றியும் சொல்லவும்வேண்டுமோ? அவ எங்களுடையஉண்மையான தாய் என்று நன்றாகஉணர்ந்துகொண்டால் எங்கள்அவசரங்களில் அவவிடமன்றி வேறுயாரிடம் நாம்போவோம்? எங்களுக்குவேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் அவமூலமாகக் கேட்டடைவோம். அவவே சகலவரப்பிரசாதங்களினதும் பொக்கிசாலை. அவவே அந்தப்பொக்கிசாலையின் அதிகாரி.

இந்தத் தாயன்புநிறைந்த சதாசகாயமாதாவின உதார குணத்தில் நாம் தோற்கடிக்கமுடியாது. எனவே, அவவைச்சரணடைந்து, அவவின் அன்புக்குப் பாத்திரவாளராய்ச் சீவிக்க—அவவுடைய சகாயத்தைப்பெற ஆவலாய் ஓடிப்போவோமாக.

## அறிவுச் சுடர்

❋ இத்தாலியின் குடிசனத்தொகைஎன்ன?

அதன்குடிசனத்தொகை சென்ற கார்த்திகையில் 4கோடியே 75 லட்சத்துப் 15 ஆயிரத்து 537 பேரெனக் கண்டறியப்பட்டிருக்கிறது.

❋ இத்தாலியின் மூன்று பெரிய நகரங்களும் எவை?

முறையே றோம், மிலான், நேப்பிள்ஸ் என்பன. இவற்றிலே றோமைநகரில் 16,51,754 பேரும், மிலான்நகரிலே 12,72,245 பேரும், நேப்பிள்ஸ் நகரில் 10,10,550 பேரும் வசிக்கின்றார்கள். இத்தாலியில் 10 லட்சம்பேருக்குமேற்பட்ட சனங்களைக் கொண்டவைகள் இம்மூன்று நகரங்களுமே.

❋ உலகில் இதுகாலவரை அதிகங்கூடிய இயற்கையான உஷ்ணநிலைஎங்கு அறியப்படலாயிற்று?

ஆபிரிக்காவிலே திரிப்பொலியிலிருந்துதெற்கே சுமார் 25மைல் தூரத்திலுள்ள வடமேற்குலீபியாவில் 1922-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 30-ந்திகதி அறியப்படலாயிற்று. அந்தக்கூடிய உஷ்ணநிலை 136·4 பாகையாகும்.

❋ தூரகிழ்த்திசையில் ஒரேயொரு கத்தோலிக்க தேசமாகவிளங்கும் பிலிப்பைன்ஸ்நாட்டின் கத்தோலிக்கசனத்தொகை எவ்வளவு?

1,63,28,856 பேரென்று 1955-ம் ஆண்டுக்கான புள்ளிவிபரஅறிக்கை தெரிவித்திருக்கின்றது. அந்நாட்டின் மொத்தக் குடிசனத்தொகை 2,67,72,116 பேர்.

❋ "திவ்வியகர்த்தரான யேசு" என்னும் நாமத்துடன் ரபீந்திரநாத் தாகூர்எனும் இந்தியகவீந்திரர் எழுதியநூலில் கிறீஸ்துநாதரைப்பற்றி யாது எழுதியிருக்கின்றார்?

"ஐரோப்பாவிலே உமக்கு இடமில்லை. வாரும், புத்தரின் இராச்சியமாகிய ஆசியாவிலே எங்கள்மத்தியில் உமதுஇடத்தை எடுத்துக்கொள்ளும். எங்கள்இருதயங்கள் கவலைகளால்பீடிக்கப்பட்டு வருந்துகின்றன. உமதுவருகையானது அவற்றை நிவிர்த்தியாக்கும்" என்று எழுதியிருக்கின்றார். ஆனல், கிறீஸ்துவேதம் ஆரம்பமாகிச் சுமார் 2,000 வருடங்களுக்குப் பின்னும் இன்று கிறீஸ்துநாதரை விசுவாசியாதவர்களாய் 144கோடிமக்கள் ஆசியாவிலே இருக்கின்றார்கள்.

❋ சோவியற்ருஷியாவின் புரட்சித்தலைவரான லெனின் என்பான் சாகச் சிறிதுவேளையின்முன் யாது சொன்னான்?

"நான் செய்த தவறை உணருகின்றேன்... நான் ருஷியாவுக்குக் கையளித்திருக்க வேண்டியது என்ன? ... பன்னிரு பிரான்சீஸ் அசீசியர்களே" என்று சொன்னான்.

❋ நரிஒன்றும் எப்போதாவது ஒருநாட்டினை அரசாண்டதுண்டா?

ஆம், இந்தியாவிலே பாட்ரப்கார் இராஜா தோல்வியுற்ற மற்றோர் இராஜாவை நிந்தாட்சணைசெய்யும் நோக்கத்துடன் கார்வருநாட்டின் அரசனுக ஓர்நரியை முடிசூட்டிவைத்தார். அந்த இராஜநரியும் பன்னிருவருடகாலம் அந்நாட்டை ஆட்சிசெய்து வரலாயிற்று. அது மணிமுடிசூடிக் கழுத்திலே நவரத்தின மாலையுடன் காட்சியளிக்கும் பிரதிமைஒன்றை இப்போதும் காணலாம்.

❋ யென்எனும் நாணயம் எந்நாட்டில் வழங்கப்படுகிறது?

ஜப்பானில்வழங்கப்படுகிறது. இதன் பெறுமதி ஏறக்குறைய 1 சிலின் 2 பென்ஸ். 100 சென் கொண்டது ஒரு யென்.

❋ இலங்கையிலே சென்ற 1954-ம் ஆண்டில் எத்தனை "பிறைவேற்" கார்கள்பதிவுசெய்யப்பட்டுப் பாவனைக்குவரலாயின?

3,345 பிறைவேற்கார்கள் பதிவுசெய்யப்பட்டுப் பாவனைக்கு வரலாயின. அதாவது, நாளொன்றுக்குச் சராசரி வீதமாக ஒன்பதுகார்களாகும்.

❋ உப்பை அதிகம் உட்கொண்டால் ஏன் தண்ணீர்விடாய் உண்டாகிறது?

உப்பு உடலிலுள்ள நீரை இழுத்துக் குண்டிக் காய்களுக்குச் செலுத்துகிறது. அதிகஉப்பை நாம்உட்கொண்டால் உப்பு அதிகநீரை இழுக்கின்றது. ஆகவே, தண்ணீர்விடாய் உண்டாகிறது.

❋ தம்பலப்பூச்சி என்று பெயர் வந்தது ஏன்?

வெற்றிலை, பாக்கு என்பவற்றை மென்றுஉமிழ்ந்த நீரிலிருந்தே அது உண்டானதென்னும் நம்பிக்கையினலேதான் அதற்குத் தம்பலப்பூச்சியெனப் பெயர்வந்தது. தம்பலப்பூச்சி வெளிவந்துஉலாவுவது மழைகாலத்துக்கு அறிகுறியென்று கருதப்படுகிறது.

❋ பாவ்லிக் மொறொசொவ்எனும் ருஷியபாலியனுக்குச் சோவியற்அரசு ஞாபகசின்னம்ஒன்றை அமைத்த காரணம் என்ன?

இந்தப்பாலியன் தனது ஒன்பதாம் வயதிலே தன்னுடையதாயும், தகப்பனும் சமயநம்பிக்கை உள்ளவர்களென்று சோவியற் இரகசியப்பொலிசருக்கு அவர்களைக் காட்டிக்கொடுத்தான். அதன்பேரில் பெற்றார் இருவரும் சுடப்பட்டனர். இந்தவீரத்துவ செயலை முன்னிட்டுச் சோவியற் அரசாங்கம் ஆதாரபீடம்ஒன்றின்மீது அவனுடைய சிலைஒன்றைப் பிரசித்தமாக அமைத்திருக்கிறது.

● ஸ்பானியதேச வலென்சியாநகரிலே 1936-ம் ஆண்டு கம்யூனிஸ்தர்களால் கொலைசெய்யப்பட்ட வண. தோமஸ் போடரியா சுவாமியாருக்கும், அவரோடுசேர்ந்த மற்றும் பதினெரு யேசுசபைக் குருமாருக்கும் முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான விசாரணை றோமை விக்காரியத்தின் விசேஷநீதிமன்றத்தாலே தொடக்கப்பட்டிருக்கிறது.

● சென்ற 1954-ம் ஆண்டிலே திருப்பாலத்துவ சபையிடமிருந்து உலகமுழுவதிலுமுள்ள 35 லட்சத்துக்கு மேற்பட்டபிள்ளைகள் உதவிபெற்றிருக்கிறார்களென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இச்சபைநிதிக்கென்று இங்கிலாந்தும், வேல்சும் 15,000 பவுண் உபகரித்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியட்சத்தின் பின் 4-ம் ஞாயிறு நிருபம்

### ரோமர்: 13 ; 8—10

நாம் எவருக்கேனும் கடன்கொடுக்க வேண்டியிருந்தால் அதைக் கட்டாயம் கொடுக்கவேண்டும், ஏனெனில், அது கடன். கடமையென்று சொன்னாலும் பொருந்தும்.

அரசனுக்குத் திறை, ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களில் சுங்கப் பகுதிக்குக் கப்பம், கார் 'லைசென்ஸ்' வரி, வண்டிவரி, சைக்கிள்வரி, ரேடியோ 'லைசென்ஸ்'வரி, சோலை வரி, களியாட்டுவரி. இவைகளைச் செலுத்துவது கடன். ஆகையால், "எந்த மனிதனுடைய கடனையாவது வைத்திருந்து கடனாளி யாகாதேயுங்கள்." (8) ஒருகடன் மாத்திரம் வைத்திருங்கள். என்ன கடன்? "பிறர்சிநேக"க் கடன். இந்த ஒருகடன் மாத்திரம் கொடுக்கக் கொடுக்கத் தீராத கடன்.

பிறரை நேசிக்கவேண்டிய கடனை (ஓயாதது)த் தீர்த்துக்கொண்டு வந்தால் "பிரமாணங்களை நிறைவேற்றினதாகும்." (8)

பிரமாணங்கள் என்று பொதுவிலே சொல்லிவிட்டு, அடுத்த வசனத்திலே (9) அவைகளை விபரமாய்க் கூறுகிறார் சின்னப்பர்.

"பிரமாணங்கள்" என்றால் பத்துக் கற்பனைகளும் அடங்கும் என்கிறார்கள் சிலர். கடவுளுக்கும், அயலானுக்கும் செய்யவேண்டிய கடமைகள் எல்லாம் தேவநேசத்தில் அடங்குமே. நெருப்பிலே சூடு இருப்பதுபோலத் தேவநேசத்திலே பிறர்சிநேகம் அடங்கும். ஏனெனில், சர்வேசுரன் சகல நேசத்துக்கும் பாத்திரமானபடியால் அவரை நேசிக்கிறோம். மனிதரைச் சர்வேசுரனுக்காக "உமதுநேசத்தின் நிமித்தம்" என்று நேசிக்கிறோம்.

வேறுசிலர் "பிரமாணங்கள்" அயலானைச்சார்ந்த கடமைகளை மட்டும் தான் குறிக்கும் என்பார்கள். இவர்கள் சொல்வதற்கு ஆதாரம் என்னவெனில், 9-ம் வசனத்தில் அர்ச். சின்னப்பர் விபரமாகக்கூறும் கற்பனைகளாம். அவையாவன: "விபசாரஞ் செய்யாதே; கொலைசெய்யாதே; களவு செய்யாதே; பொய்ச்சாட்சி சொல்லாதே; பிறர்மனையை, பொருளை இச்சியாதே." (பொய்ச்சாட்சி சொல்லாதே என்பதைக் கிரேக்க பிரதியில் காணவில்லை.)

"இன்னும் வேறென்ன கற்பனை இருந்தாலும் அவையெல்லாம் உன்னைப்போல் உன் அயலானையும் நேசிப்பாயாக என்றதில் அடங்கும்" (9). இதில் போல்என்றது அளவையல்ல, தன்மையை (இனத்தை)க் குறிக்கும்.

ஏழு கற்பனைகளுள்ளும் உடன்பாடான ஒரேயொருகற்பனையை (பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக) ஏன்கூறாமல் விட்டார் சீஷர் சின்னப்பர்? அதை அவர் இன்றைய நிருபத்தில் அடங்காத முந்திய வசனமொன்றில் (7) தெளிவாய்க் கூறிவிட்ட படியாற்றான்.

இன்னும் தொடர்ந்து, "பிறர்சிநேகம் தீமைசெய்யாது" (10) என்கிறார் அப்போஸ்தலர். அவர் கூறவிரும்புவது என்ன? தீமையாகிய அழித்தல் வேலை ஒன்றும் செய்யாமல் விடுவது மாத்திரமல்ல, பிறனுக்குத் தேடக்கூடிய (ஆக்கவேலை) நன்மையெல்லாம் தேடிக்கொடுக்கும் என்பதே.

ஆகையால், அயலானை நேசித்தால் அவனைச் சார்ந்த எல்லாப் பிரமாணங்களையும் நிறைவு படுத்தியதாகும்.

"நிறைவு" படுத்தியது என்னும் பொழுது சர்வேசுரனையும், நமதுஅயலானையும் நேசிப்பதால், பிரமாணங்களை நிறைவுபடுத்திச் சம்பூரணமாய், சுமுத்திரையாய் அனுசரித்ததாகும்.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்




## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

இம்மாதம் 31-ந் திகதி அர்ச். டொன் ஜோண்பொஸ்கோ திருநாள். இவர் இத்தாலி தேசத்தவர். நாம் தமிழில் யோசெவ் சுவாமி, மிக்கேல்சுவாமி என்று சொல்லுவதுபோல இத்தாலி தேசத்தவர் குருவானவரை "டொன்"என்று அழைத்து, டொன் யோசெவ், டொன் மிக்கேல் என்பார்கள்.

டொன்பொஸ்கோ சிறுபிள்ளைகளில் அதிக நேசமுள்ளவர். அதுவும் இல்லிடமற்ற—பெற்றோரின் பராமரிப்பற்ற பிள்ளைகளில் வெகுநேசம். அப்படிப்பட்ட பிள்ளைகளைத் தேடிஎடுத்துத் தூறின் பட்டணத்திலே பராமரித்து வந்தார். தெருத் திண்ணைகளிலும், சந்தி சாவடிகளிலு மிருந்த பிள்ளைகளைச் சேர்த்து, உணவூட்டி, உடைகொடுத்து, கல்வியூட்டி, தொழில் பழக்கி அவர்களுடைய ஆத்துமத்தையும், சரீரத்தையும் பாதுகாத்தார்.

தம்முடைய இந்தவேலையைச் செய்வதற்கு உதவியாகச் சந்நியாச சபைஒன்றை அடியிட்டார். அதற்குச் சலேசியன் சபையென்று பெயர். ஆண்களை மாத்திரமல்ல, பெண்களையும் பாதுகாப்பதற்குக் "கிறீஸ்துவர்களின் சகாயமரியாய்" என்ற பெயருள்ள கன்னியாஸ்திரிகள் சபையையும் அடியிட்டார். இவ்விரு சபைகளும் உலகத்தின் பல்வேறு தேசங்களில் இளைஞருக்கு ஊழியஞ்செய்து வருகின்றன.

டொன்பொஸ்கோ தாமேபடிப்பித்து ஞானவழிகாட்டிவந்த தொமினிக் சவியோ இப்பொழுது அர்ச்சியசிட்டராய் வணங்கப் படுகிறார்.

இளைஞரை நேசித்த இந்த அர்ச்சியசிஷ்டரை நேசியுங்கள். அவர் ஆண்டவரை நேசித்து, அவருக்காகச் சிறுவரை நேசித்தார். அவர்களுக்கு மோட்ச வழிகாட்டியானர். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுங்கள். அநேக "டொன் பொஸ்கோ"களைத் தரும்படி கேளுங்கள். அவருடைய திருநாளில் பூசை கண்டு நன்மை உட்கொள்ளுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணா

## திருப்பலி

### கடவுளுக்கு உவந்த காணிக்கை

நான் ஒருகேள்வி கேட்கப்போகிறேன். ஒருமிருகத்தை அல்லது உணவைக் காணிக்கை யாக்குவது சர்வேசுரனுக்கு உவப்பாயிருக்கும் என்று எண்ணுகிறீர்களா? நான் அப்படி எண்ணவில்லை, திறமான ஒருகாணிக்கையையும், அதை ஒப்புக்கொடுக்க முறையான ஒருகுருவையும் சர்வேசுரன் விரும்பினர்.

சர்வேசுரன் என்ன செய்தார் தெரியுமா? அவர் தமது மகனை இந்த உலகத்திற்கு அனுப்பினர். அந்தமகன் பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாவது ஆள். அவர் மெய்யான தேவன். தேவன் அரூபி. ஆகையால், அரூபியான தேவகுமாரன் வருத்தப்படமுடியாது. ஆனபடியால் அவர் மனித சுபாவம் எடுத்தார். மனிதனானர். மனிதனாகிய தேவசுதனுக்குப்பெயர் யேசு.

யேசு மெய்யான கடவுள். அவர் மனிதனும்தான். அவருக்கு மனித சரீரம் இருந்தபடியால் வருத்தப்பட முடியும். அந்தச்சரீரந்தான் காணிக்கை. யேசு குருவுமாவார். தம்மை வதைத்துக் காயப்படுத்திச் சிலுவையில் அறைகிறவர்களுக்குத் தமது முழு விருப்பத்துடன் இடங்கொடுத்தார்.

அப்படியே அவர் குருவாய்நின்று, காணிக்கைப் பொருளாகத் தம்மையே சர்வேசுரனுக்கு உவந்த பலியாக ஒப்புக்கொடுத்தார். அக்காணிக்கையில் சர்வேசுரன் மிகவும் விருப்பங் கொண்டார். குருவும், காணிக்கையும் அவருடைய குமாரன் அல்லவா? அவருடைய குமாரன் எல்லாவல்லமையும், சகல பரிசுத்தமும், சகல நன்மையும் நிறைந்த கடவுள்.

பாஸ்குச் செம்மறிக் குட்டியின் பலியானது யேசு சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலியை நினைவூட்டுகின்றது. பாஸ்குச்செம்மறியை முதல்முறை பலியாக்கினபொழுது அதைக் கொன்றார்கள். கொன்று அதன் இரத்தத்தை இசிறவேல் சனங்கள் தாங்கள் வசித்த வீட்டு வாசற் கதவில் பூசினார்கள். மரணதூதன் வந்தபொழுது, இரத்தம் பூசியிருந்த வீடுகளிற் குழந்தைகளைக் கொல்லவில்லை.

யேசு தேவ செம்மறியென்று அழைக்கப்படுகிறார். அப்படிப்பட்ட ஒருசித்திரத்தை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். அவர் எங்கள் பாவங்களைப் போக்குகிறவர். எங்களை நித்தியமான பாவமரணத்திலிருந்து காப்பாற்றுகிறார்.

யூதசனம் பாஸ்குப் பண்டிகைக்குத் தேவையான செம்மறியைச் சமைக்கும்பொழுது, அதன்உடலுக்குள் ஒரு தடியைவிட்டு நெருப்புக்குமேல் பிடிப்பார்கள். அது யேசு எங்கள் பலியாக — தேவனுக்கு உவப்பான காணிக்கையாகச் சிலுவையில் தொங்கியதை நினைவூட்டுகிறது. கல்வாரிமலையிலே சிலுவையில் யேசு தம்மை ஒப்புக் கொடுத்ததுதான் எங்கள் மோட்சபிதாவுக்கு நிறைவான சந்தோஷத்தைக் கொடுத்தது.

எங்களுடைய திறமான பலியாகத் தம்முடைய குமாரனை உலகத்துக்கு அனுப்பிய சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தை யிட்டு நாம்அவருக்கு நன்றிசொல்ல வேண்டும். தேவசுதன் பட்ட பாடுகளுக்காகவும், அவருடைய மரணத்துக்காகவும் அவருக்கு நன்றி கூறுங்கள்.

எல்லாவற்றிலும் மேலாகத் தேவ கட்டளைக்கு அமைந்து நடப்பதில் உங்கள் நன்றியைக் காட்டுங்கள். "நீங்கள் என்னை நேசித்தால் என்கட்டளைகளை அனுசரியுங்கள்" என்கிறார் யேசு. விசேஷமாகச் சர்வேசுரனுடைய இடமாக இருந்து உங்களைப் பராமரிக்கிற உங்கள் பெற்றோருக்கு அமைந்து நடவுங்கள். உங்கள் அயலாருக்கும் அன்புகாண்பியுங்கள்.

## கணிதப்பகுதி

1. ஐந்துபேர்கூடி ஒரு எலுமிச்சம் தோட்டம் செய்தார்கள். ஒருநாள் ஐவருங்கூடித் தோட்டத்தில் பறிக்கக் கூடிய எலுமிச்சம்காய்களைப் பறித்தபின் பசிக்களைமிகுதியால் பிறகுவந்து பகிர்வோம்என்று வீட்டுக்குப் போய்விட்டார்கள். பின்னர் அவர்களில் முதலாவதாக ஒருவன்வந்து மற்றவர்களைக் காணவில்லையே என்றுவிட்டு, உள்ள எலுமிச்சங்காய்களை 5 பங்காகப் பிரித்தபோது 1 மிஞ்சியது. அவன் $\frac{1}{5}$ பங்கையும், மிஞ்சிய 1 காயையும் எடுத்துக்கொண்டு போய் விட்டான். இரண்டாம்ஆள் வந்து மீதியான காய்களை 5 பங்காகப் பிரித்தபோது 1 மிஞ்சினது. அவனும் $\frac{1}{5}$ பங்கையும் மிஞ்சிய 1 காயையும் எடுத்துக்கொண்டு போய் விட்டான். மூன்றும் ஆளும் மிகுதியானகாய்களை 5 பங்காகப் பிரித்தபோது 1 மிஞ்சியது. அவனும் $\frac{1}{5}$ பங்கையும், மிஞ்சிய 1 காயையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான. நாலாம் ஆளும் வந்து மீதியான காய்களை 5பங்காகப்பிரித்தபோது 1 மிஞ்சியது. அவனும் $\frac{1}{5}$ பங்கையும், மிஞ்சிய 1 காயையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். ஐந்தாம்ஆளும்வந்து மிகுதியான காய்களை 5 பங்காகப் பிரித்தபோது 1 மிஞ்சியது. அவனும $\frac{1}{5}$ பங்கையும், மிஞ்சிய 1 காயையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். பிறகு ஐந்துபேரும் வந்து மிகுதியானகாய்களை ஐந்துபங்காகப் பகிர்ந்தபோது மிஞ்சாமல் சரியாயிருந்தது. தோட்டத்திற் பறித்த காய்கள் எத்தனை?

2. 3 பேர்கூடிக் கத்தரித் தோட்டம்ஒன்று செய்தார்கள். இவர்களும் எலுமிச்சம்தோட்டக்காரரைப் போலவே காய்களைப் பறித்துவிட்டு வீட்டுக்குச்சென்றார்கள். முதலாம்ஆள்வந்து உள்ளகாய்களை 3 பங்காகப்பிரித்தபோது 1 மிஞ்சியது. அவன் $\frac{1}{3}$ பங்கையும், மிஞ்சிய ஒருகாயையும் எடுத்துக் கொண்டுபோய்விட்டான். அப்படியே மற்றஇருவரும் வந்து மீதியானகாய்களைப் பிரித்தபோது ஒவ்வொன்று மிஞ்ச அவ்வாறே எடுத்துக்கொண்டு போனார்கள். பிறகு மிகுதியான காய்களை மூன்றாகப் பகிர்ந்தபோது மிச்சமின்றிச் சரியாய்ப் பகிர்ந்தார்கள். ஆய்ந்தகாய்கள் எவ்வளவு?

பி. பிலேந்திரன்,
இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் படும் பாடு!

மாடிவீட்டு மரகதத்தின்
மண்பானை சுரண்டிக்
கோடிவீட்டுக் கோமளத்தின்
கொள்ளிகளைக் கொத்திப்
"போடி" வீட்டு எசமானி
போடுந்தாளத் திற்கு
ஆடிவிட்டு வருவாள்என்
அன்னையொரு கோதாய்!

●

குடிவெறியில் என்அப்பா
குரங்காட்ட மாட
முடிவுவரை சிலைபோல
மூலைக்குள் நிற்பாள்
அடிஉதைகள் பலஏற்பாள்
அழக்கூட மாட்டாள்
விடியஅவர் பாதத்தில்
வீழ்ந்துகும் பிடுவாள்!

●

பள்ளிக்குப் போவென்று
பச்சரிசிக் கஞ்சி
அள்ளிஅள்ளித் தருவாள்பின்
அடிப்பானைக் குள்ளே
கள்ளமதாய் நீர்வார்த்துக்
கஞ்சியெனக் குடிப்பாள்
எல்லையிலாத் தியாகத்தின்
இமயமேஎன் னம்மா!

●

பாடுபட்டு நாலுபணம்
வீடுகொண்டு சேர்ப்பாள்
கேடுகெட்ட என்தந்தை
கேளாமற் திருடி
ஓடிமதுக் கடையகத்து
உண்டியலிற் சேர்ப்பார்
மூடியவாய் திறவாள் தன்
முகமலர்ச்சி குறையாள்!

●

கடன்காரர் கூச்சலிடக்
கழுத்தோடு ஒட்டிக்
கிடந்துருளும் பொற்கயிற்றைப்
பிய்த்துஅதை விற்றுப்
பகிர்ந்திடுவாள் எனைப்பெற்ற
பத்தினிக்கோ யில்தான்
மடந்தையருள் மாணிக்கம்!
மனுஉருவிற் தெய்வம்!

— பரிமளா இராசதுரை

## சிந்திக்கத்தக்க பொன் மொழிகள்

1. உனக்கு யாரும் பயப்பட வேண்டுமென்றால் அன்பு கொள்ளச் செய்.

2. பணம் பலகருமங்களைச் செய்யும்; செபம் மாத்திரம் எல்லாவற்றையும் நிறைவேற்றும்.

3. கிறீஸ்துவ கல்வி மாத்திரமே முழுமனிதனையும் சீர்ப்படுத்தும்.

4. எப்போதும் முகங் குறுவிப் போய் இருக்கும் இளைஞனை ஒன்றில் வைத்தியன், அல்லது ஆத்துமகுரு கண்காணிக்க வேண்டும். அதிகமாய் ஆத்துமகுருவின் கண்காணிப்பே அவசியமாயிருக்கும்.

— அர்ச். ஜோண்பொஸ்கோ

## பேச்சுப் போட்டி

22-1-55-இல் வவுனியா அரசினர் சிரேஷ்ட பாடசாலையில் நடைபெற்ற இவ்வாண்டுக்குரிய வவுனியா வட்டாரப் பாடசாலைகளின் பேச்சுப்போட்டியில் முதலியாகுளம் கத்தோலிக்கபாடசாலை முதலிடம்பெற்றதையும், யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் வடமாகாணச் சுவபாஷா பாடசாலைகளின் பொதுப்பேச்சுப் போட்டிக்கு வவுனியாவட்டாரப் பாடசாலைகளின் சார்பாக இப்பாடசாலை தெரிவு செய்து அனுப்பப்பட் டிருப்பதையும் சந்தோஷத்துடன் தெரிவிக்கிறோம்.

பேசியவிஷயம்: "Justice Delayed is Justice Denied."

"நீதியைத் தாமதம்செய்வதால் நீதி மறுதலிக்கப்படுகிறது."

— நிருபர்

## தென்னையே!

"ஜெயம்"



(1)
உன்னைவைத்து நான்வளர்க்க
உண்மை அன்பினால்
என்னைவாழ வைக்கவந்த
இன்பத் தென்னையே!

(2)
ஓலைதந்து வீடுவேய
உதவி செய்கிறாய்
சோலையாக நின்றெனக்குச்
சுகம் அளிக்கிறாய்.

(3)
தமிழைப்போலும் நீரைவார்த்
தாகந் தீர்க்கிறாய் [துத்
அமுதமூறுங் காய்களீந்து
அன்னம் ஊட்டுறாய்.

(4)
வெட்டியுன்னைக் கூறுபோட
விலை கொடுக்கிறாய்
மட்டிலாத நன்மைதந்து
மகிழ்வ ளிக்கிறாய்.

(5)
எண்ணிலாத பயனிறைந்தும்
ஈனக் கள்ளினால்
மண்ணிலுந்தன் பெயர்கெடுத்து
மானம் போக்கிறாய்.

## புதியகோவில் திறப்புவிழா

எட்டியாந்தொட்டைப்பங்கிலே தொனியகலையைச்சேர்ந்த மாளிபொடத் தோட்டத்தில் ஒருஅழகிய பெரியகோவில் தோட்ட உத்தியோகஸ்தர்களினதும், எல்லாக் கத்தோலிக்கமக்களினதும், மற்றுஞ்சகல தர்மிஷ்டர்களினதும் பெரும்உதவியாலும், விடாமுயற்சியாலும் சுமார் பன்னீராயிரம்ரூபா செலவில் சந்தானுள்மாதாபேரால் கட்டப்பட்டது. சென்ற 2-1-55 ஞாயிறுவாரம் நவநாட்தொடங்கி வண. ஆஞ்சலோ ஸ்டெபனிஸி சுவாமியவர்களும், பங்குக்கோவில்பிள்ளை திரு. ஜோசப் அந்தோனிஅவர்களும் தினசரி நோவனையின்பின் சமயசம்பந்தமான சொற்பெருக்குகள் ஆற்றியதின்மேல் சமயசம்பந்தமான சினிமாச்செய்திச் சுருள்படமும் காண்பிக்கப்பட்டது. 8-ந் திகதி சாயந்தரம் மாலைஆராதனை பாடப்பட்டுச் சந்தானுள் மாதாவின் திருச்சுரூபம் ஊர்வலமாகக் கடைத் தெருநீளம் எடுத்துச்செல்லப்பட்டது. 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் காலிமேற்றிராணியாரான மகாவந். என். எம். லௌதாதியோ ஆண்டவர்அவர்கள் தோட்டப்பெரியதுரை திரு. என் எஸ். பிறேசர் அவர்களும், அவர்பாரியாரும், சகல உத்தியோகஸ்தர்களும், சகல தொழிலாளர்களும் தோட்டக் கோவில்பிள்ளை திரு. வெ. ஜோசப் கங்காணியும் வெகுவிமரிசையாக ஆண்டவர் அவர்களுக்குப் பொன்மாலை அணிவித்து வரவேற்றனர். அவரும், வண ஐ. மரினோ, ஜே. யாக்கோனு, பத்தாலியா, என். றெட்ரிகோ, சி. யன்னக்கோனே, ஆஞ்சலோ, சி. வெக்கியோனி, ஸ்ரேபன், ஜி. யன்னக்கோனே, ஸ்கோலஸ்டிக் ஆகிய பத்துக்குருமாரும் சமுகமளித்தனர். பிற்பகல் 4 மணிக்குப் புதியகோவில் ஆசீர்வதிக்கப்பட்டுப் பிற்பகல் 5மணிக்கு ஆண்டவரவர்களால் பெரியபாடற்பூசை நிறைவேறித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டுச் சுற்றுப்பிரகாரத்துடன் திருநாள் முடிவடைந்தது. அதன்பின் பொதுசனங்களுக்குப் பெரும் அன்னதானமும் வழங்கப்பட்டது. இப்புதியகோவில் திறப்புவிழாவில் சுமார்ஆயிரவருக்கதிகமான பக்தர்கள் கலந்துகொண்டனர். இத்தேவாலய கட்டிடநிதிக்காக உதவிபுரிந்த சகலருக்கும் சந்தானுள் மாதா அருள்புரிவாராக.

— நிருபர்

## அர்ச். செபஸ்தியார் திருநாள்

வல்வெட்டித்துறையிலே அர்ச். செபஸ்தியார்திருநாள் வழமைப்பிரகாரம் சென்ற20-1-55 வியாழக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. 11-ந்திகதி கொடியேற்றத்துடன் நோவனைகள்ஆரம்பமாயின. கடைசியான 9-ம்நோவனையன்று கோயில் உள்ளும் புறமும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. அத்தருணம் அர்ச். சூசையப்பர் ஆசிரியகல்லூரிஅதிபர் வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்களால் அரிய தோர்பிரசங்கஞ் செய்யப்பட்டு, மூன்று குரவர்கள்பாடிய வேஸ்பருடன்விமரிசையாக நோவனை முடிவடைந்தது. 20-ந்திகதிகாலை 7 மணியளவில் திருநாட்பாடற்பூசை நிறை வேறியபின் அர்ச். செபஸ்தியார் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெற்றுத் திருநாள் இனிது முடிவடைந்தது. அன்றுசாயந்தரம் அன்னதானமும் வழங்கப்படலாயிற்று.

— நிருபர்

## பெற்றூர் தினவிழா

நெடுந்தீவு, மாவிலித்துறைப் பாடசாலையிலே 20-1-55 வியாழக்கிழமை மாலை 8 மணிக்குப் பெற்றூர் மாணவர்களுடன், மற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்களும் திரளாகச் சமுகமளித்திருக்க, வண. கட்டளைக்குரவர், பகுதிவித்தியாதரிசியுடன் உயர்மேடையில் அமர்ந்து தமது தலைமைப்பேருரையை நிகழ்த்தினர். பின்னர் தலைமைஆசிரியர் பாடசாலை அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதிலே இப்பாடசாலையின் 75-ம்வருட யூபிலிஆரம்பவிழாவே இக்கொண்டாட்டமென்றும், வண. சுவாமியவர்கள் இந்தயூபிலியை இனிதேகொண்டாடுதற்கு ஆவனசெய்து ஊக்குவிப்பாரென்றும் தெரிவித்தனர். அவரைத் தொடர்ந்து ஆசிரியர் எம். ஜே. சின்னத்துரைஅவர்கள் "பெற்றூரும் மாணவரும்" எனும்விஷயத்தையும், பகுதிவித்தியாதரிசி அவர்கள் "பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பு" எனும் விஷயத்தையும் எடுத்தாண்டு அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர். தலைவர் சுவாமியவர்கள் குறிப்புரை கூறினார். அதன்மேல் பால்மணம்மாறாத பச்சிளஞ்சிறுமிகளின் நடனம் அனைவரையும் கொள்ளைகொண்டது. யோசேப்பு மருமாவின் ஓர்பகுதிநடித்துக் காட்டப்பட்டது. ஐந்துவயதுச்சிறுவன் மத்தளமடிக்கக் கோலாட்டம் ஆவேசம் பொருந்தியதாய் இருந்தது. சங்கங்களின் அக்கிராசனர்களின் தாறுமாறென்னும் விஷயமும் நடித்துக்காட்டப்பட்டது. இத்துடன் பச்சாத்தாப தேவதிரவியஅநுமான ஆயத்தமெனும் விஷயம் மாணவிகளால் படிப்பித்துக் காட்டப்பட்டது. ஆங்கில, சிங்கள நடனங்களுடனும், 10-30 மணிக்கு ஆசிரியர் வி. எஸ். ஜேம்ஸ்அவர்களின் நன்றியுரையுடனும் விழா இனிதே முடிவெய்தியது.

ஓர் மாணவன்.

## TO LET

Land suitable for any business or otherwise in Main Street.

Apply Y Z.

c/o Catholic Guardian.

## பெயர்மாற்ற அறிவித்தல்

இதுவரை க. யோ. பெனடிக்ற் என அறியப்பட்டுவந்த நான், பெனடிக்ற் எனும்வார்த்தைக்குப்பதில், அதன் நேரான தமிழ்அர்த்தமுள்ள **ஆசிநாதன்** எனும்சொல்லை, எனக்குப் பெயராக அமைத்துக் கொண்டுள்ளேன் என்பதை இதனால் எல்லவர்க்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பண்டித ஆசிரியன்,
'லலிதா பதி' ஆசிநாதன்
காங்கேசன்துறை,
20-1-55

## ஆத்தும சீவியத்தின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அறியாதவேளையிலும் அவ் ஊழியனுடைய எசமான்வந்து அவனைநீக்கி வஞ்சனைகாரர்களோடே அவனுக்குப் பங்கைவிதிப்பான். அவ்விடத்தில் என்றும் அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத். 24: 42-51).

இந்தஉவமை குடும்பஸ்தர்களாகிய நம்மெல்லோர்க்கும், விசேஷமாய், குடித்துவெறித்து மதம்கொண்டயானை போல் தங்கள்மனைவிமக்களை இம்சித்து, அட்டூழியம்புரிந்துவரும் சகலர்க்கும் ஓர்நற்படிப்பனையாய் இருக்கட்டும். ஆம், நமதுமனைவிமக்கள் ஆண்டவரின் நம்பிக்கைச்சொத்தென்பதை இவர்கள் அறியார்கள்போலும். இவ்விதஅதர்மக்காரர் இனியாகிலும் அறிந்துஅடங்கட்டும். எனவே, இந்தப்புதிய ஆண்டில் பாவிகளும், பலவீனருமாகியநாம் தேவ உதவியைக் கொண்டு நமது பாவக்கிரிகைகளாகிய பழையமனிதனைக்களைந்து, புண்ணியக்கிரிகைகளாகிய புதிய மனிதனை அணிந்துகொண்டு, அந்தவிவேகமுள்ள ஐந்துகன்னியர்களைப்போல் எந்தநேரமும் மரணத்தின்மூலம்வரும் ஞானமணவாளனாகிய கிறீஸ்துநாதரை எதிர்கொண்டழைக்க ஆயத்தமாயிருந்து (மத். 25: 10) இவ்வகையாய் இப்புதிய ஆண்டில் "நமது இரட்சணியத்தின் வேலையை அச்சநடுக்கத்தோடும், இருதய நேர்மையோடும் சம்பூரணமாய் நிறைவேற்றுவோமாக!" (பிலி. 2: 12.)

● சமீபத்திலே பரிசுத்தபாப்பாசர் அபாயநிலைமையில் இருந்தபோது இதுசெய்தியை இரும்புத்திரைக்குப்பின்னுள்ள போலாந்து, ஹங்கேரிமுதலாம் நாடுகள்அறியாதவண்ணம் கம்யூனிஸ்தர்களின் ஆதீனத்திலுள்ள வானொலிநிலயங்களும், பத்திரிகைகளும் மௌனஞ்சாதித்துவிட்டன. ஆயினும் இதுசெய்தி அந்நாடுகளில் காட்டாக்கினி போல் பரந்து மக்களெல்லாம் அவர் சுகமடையும்படியாகப் பயபக்தியுடன் மன்றாடி வரலானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரிரேட், பரி. யோவான் ஸ்ரேமான்கத்தோலிக்ககோவில் கட்டளைச்சுவாமி வண. பிதாபிரான்சீஸ் சேவியர்.

வழக்காளி

**இல. 4583**

எதிராக

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 1273-ம் இலக்க தத்துவ வழக்கில் வண. பிதா எஸ். பிரான்சீஸ்சேவியர் மரணசாதன தத்துவகாரர். யாழ்ப்பாணம் ஸ்ரேமான்கத்தோலிக்கமேற்றிராணியாண்டவர் மகாவந். Dr. J. எமிலியானுஸ் பிள்ளை, O. M. I.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 4583-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால்விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1955-ம்ஞூ பங்குனிமாதம் 8-ந்திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிகோயிற்பற்று, சுண்டிக்குளியும், சிவியாதெருஇறையும், "முதலைக்குளம்புலம்" அல்லது "கப்பித்தான்தோட்டம்" பர. நி. இ. 1-ம் குளி $8\frac{1}{10}$ வீடும், செய்பயிர், வான்பயிர்களும் கிழக்கெல்லையில்இருக்கும் கிணற்றில் அரைவாசிப்பங்கும் ஸ்ரேட்டிலிருந்துவரும் கையொழுங்கைப் பாவிப்புரித்தும், தெற்கேகுறித்தவழிவரைக்கும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லைகிழக்கு. சில்வேஸ்ரர் மகள்அன்னம்மாவின் ஆதனம்வடக்கு. நன்னித்தம்பி கைம்பெண் தங்கம்மாவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்மேற்கு. அந்திரேசியோவான்பிள்ளை பெண் ஞானப்பிரகாசிக்கும் உரியஆதனம் தெற்கு.

S. RATNASABAPATHY,
Commissioner of Sales.
Jaffna, 25-1-55.

---

### நன்றியறிந்த தோத்திரம்

சென்ற மூன்றுவருஷகாலமாக எனது வயிற்றில் குடற்கோளாறு உண்டுபட்டுச் சாப்பிடமுடியாமலும், கொஞ்சம் சாப்பிட்டாலும் சாப்பிட்டபின் குடலில் தாங்கமுடியாதவேதனையையும் உண்டுபண்ணியது. இவ்வருத்தத்துக்கு நான் பாவித்த மருந்துகளோ கணக்கிலடங்கா. எனக்குச் சிகிச்சைசெய்த ஆங்கில, சுதேச வைத்தியர்களும் இனிமேல் மருந்துசெய்ய இடமில்லையென்று கைவிட்டு விட்டார்கள். நானோ சதாசகாய மாதாவின் இரக்கத்தைக் கேட்டு அவவின் உதவியை இரந்துநின்றேன். நாங்கள் காத்திராதவிதமாய் எனது குடலில் இருந்தவியாதி எனக்கு வைத்தியம்செய்த டக்றரால் கண்டுபிடிக்கப்பட்டு உடனே சத்திரவைத்தியம்செய்யவேணுமென்று சொன்னார். எனக்குச் சத்திரவைத்தியம்செய்வதற்கு அற்பபெலனும் இருக்கவில்லை. மாதாவின் இரக்கத்தினால் எனது குடலில்செய்த பெரிய சத்திரவைத்தியம் டக்றர்மாரும் ஆச்சரியப்படத் தக்கவிதமாய் நடந்தேறியது. சதாசகாயமாதாவின் புதுமையால் இப்போ நான் குடல்வேதனை இல்லாமல் நன்றாகச் சாப்பிட்டுவருகிறேன். இன்னும் நான் கேட்ட அநேக மன்றாட்டுகள் அவவின் புதுமையினால் கிடைக்கப்பெற்றேன். சதாசகாயமாதாவின் மகிமை என்றும் புகழப்படக்கடவது. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

மாதகல் தோ. அ.

---

● உலகில் தற்போதுவாழும் சனத்தொகை முழுவதையும் மாத்திரமல்ல, வருகால சந்ததிகளையுமே போஷிப்பதற்குப்போதியஉணவுகள் மீனாகவும், நண்டு, ஆமைமுதலிய ஓடுள்ளபிராணிகளாகவும், பூண்டுகளாகவும், பாசிகளாகவும் கடலில் ஏராளமாயிருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. அதனால் செழித்த ஓர் தோட்டக்காணிக்குக் கடல்ஒப்பிடப்படுகிறது.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. 10589**

யாழ்ப்பாணம் சீதாரி 4-ம் குறுக்குத் தெரு குடி.

1. அல்பிறட் சுவாம்பிளளையும் பெண்.
2. கெலன்ரேஸ் சுவாம்பிள்ளையும்.

—வழக்காளிகள்

எதிராக,

யாழ்ப்பாணம் சீதாரி குடி,

1. P. Q. கிறிஸ்தியன் பெண் மேரி கிறிஸ்தியன்.
2. அக்கினெஸ் பொன்னம்மா எவேட்ஸ்.
3. P. J. கொன்ஸ்டன்ரயின்.
4. J. E. T. கிறிஸ்தோப்பர்.
5. நீர்கொழும்பு குடி, S. W. S. இளையதம்பியும், பெண்.
6. பிறிமோசா இளையதம்பியும்.
7. மலாயாவிலிருக்கும் S. யோசேப்புவும்.
8. பெண் மேரி யோசேப்புவும்.
9. சிங்கப்பூரிலிருக்கும் பயஸ்கிறிசோஸ்ரமும், 7-ம் 8-ம் 9-ம் எதிரிகள். அவர்களின் அற்ரோணித் தத்திவகாரனுக 3-ம் எதிரி மூலமாக.

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10589-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955-ம்ஞூ மாசி மீ 12-ம் உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குழி கோவிற்பற்று சீதாரி மூன்றும்குறுக்குத் தெருவில்இருக்கும் ஓர்வீடும், வளவும். பர. நில. இல. 2. குளி 11 16/11-ம் அதற்குச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கும், வடக்கும் W. B. கனகரத்தின பெண் மேரி யோசேப்பின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு, 3-ம் குறுக்குத் தெரு. தெற்குவங்கித்தெரு. இதடங்கலும்.

S. Ratnasabapathy,
*Commissioner of Sales*

42, Colombogam Road,
Jaffna 17-1-55.

---

### சுதேசமகிமைப் பட்டங்கள்

வழமையிலே மாட்சிமைதங்கியமகாராணியார் வழங்கும் சாம்பிராச்சிய மகிமைப்பட்டங்களுக்குப்பதில் புது மாதிரியான சுதேசமகிமைப்பட்டங்களை இலங்கை வழங்கவேண்டுமென்று பிரதமர் கூறியயோசனையை இராணியார் ஒப்புக்கொண்டிருக்கின்றார். இம்முறைஅருளப்பட்ட புதுவருட மகிமைப்பட்டங்களே அவரால்வழங்கப்படும் கடைசியானசாம்பிராச்சிய மகிமைப்பட்டங்களாய் இருந்திருக்கவேண்டியன. ஆனால், புதிய சுதேசமகிமைப்பட்டங்களைச் சித்தஞ்செய்வதில் காலதாமதம்ஏற்பட்டகாரணமாக வருகிற ஆனிமாதம் வழங்கப்படும் மகாராணியாரின் பிறந்ததின மகிமைப்பட்டங்கள் சாம்பிராச்சிய மகிமைப்பட்டங்களாகவே இருக்கும்.

### திரிகோணமலை ஆகாயப்பிரயாணம்

வருகிறமாசிமாதம் 1-ந்திகதிதொடக்கம் கொழும்பிலிருந்து திரிகோணமலைக்குத் தினமும் ஆகாயப்பிரயாண சேவை நடத்த 'எயர்சிலோன்' எண்ணுகின்றது. இந்தவிமானத்தில் எத்தனைபிரயாணிகள் செல்லலாம்; எவ்வளவு சாமான் கொண்டுபோகலாம் என்பது இன்னும் ஒழுங்காகவில்லை. ஆனால், முந்தப் பரீட்சார்த்தமாகவே இந்த ஆகாயப்பிரயாணசேவை நடத்தப்படவிருக்கிறது. கொழும்பிலிருந்து திரிகோணமலைக்கு ஆகாயவிமானத்திற் செல்ல ஒன்றரைமணித்தியாலம் செல்லும். பிரயாணச்சலார் 25 ரூபாவாகும்.



## பல தேசங்களில்

### சத்தியாக்கிரகம் உண்ணுவிரதம்

விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியின் பழையமாணவர்கழக இரண்டாவதுஆண்டு விழாவின்போது திரு. பி. டி. இராஜன் அவர்கள் பேசுகையில் பின்வருமாறு கூறினர்: "அந்நியநாடுகள் அணுக் குண்டுஆயுதங்களைக் கண்டுபிடித்துள்ள இந்நாளில் சத்தியாக்கிரகம், உண்ணுவிரதம் இரண்டையும் சிறந்தஆயுதங்களென நாம் கூறிக்கொள்ளுகிறோம். சத்தியாக்கிரகம் அஹிம்சையானது என்று தான் கூறப்படுகிறது. ஆனால், அது பலாத்காரத்தில்தான் முடிகிறதுஎன்பதை நாம்காண்கிறோம். உண்ணுவிரதம் சிறுபிள்ளைகளின்பிடிவாதம்போன்றது. உண்ணுவிரதத்தைத் தொடக்கிய காந்தியடிகளே பிறர் உண்ணுவிரதமிருப்பதைக் கண்டித்திருக்கிறார். இவைகள் ஜனநாயகஆட்சிக்குஎதிரானவையாகும். இவைகள் பொதுவாழ்க்கையின் தரத்தையும், ஒழுக்கநெறியையும், ஆன்மீகத்தன்மையையும் களங்கப்படுத்துகின்றன."

### புராதனகால மட்பாண்டங்கள்

பலஸ்தீனாவிலே ஒலிவேத்மலையில் புதைபொருள் ஆராய்ச்சியாளர் நிலத்தைஅகழ்ந்துநடத்திய ஆராய்ச்சியின்போது, ஆபிரகாம்பிதாப்பிதாவும், மெல்கிசேடெக்எனும் ஜெருசலேமின் பெரியகுருவும் சீவித்திருந்தகாலத்திலே, கி. மு. ஏறக்குறைய 1750-ம்ஆண்டையடுத்த ஆயிரத்துக்குமேற்பட்ட புராதன மட்பாண்டங்களையும், பிறபொருட்களையும் கண்டெடுத்துச் சேகரித்திருக்கின்றார்கள். அந்தக்காலத்திலே இசிறவேலர்கள் இன்னுமே ஜெருசலேமுக்குப் போகாதிருந்தார்களாம். இவைகள் கண்டெடுக்கப்பட்ட இடம் அரசர்களை அடக்கஞ்செய்த, அன்றேல் ஏதோஒரு அஞ்ஞான கோயில்இருந்த இடமாயிருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது. அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள பெருந்தொகையான பிரேத சேமப்பாத்திரங்கள் இருந்தவிடங்கள் சனுனித்தியரின்காலத்தில் பலஸ்தீனாவைஆட்சிசெய்த எகிப்திய "இடையரான அரசர்"களின் சமாதிகளாய்இருந்திருக்கலாமென நிபுணர்களைச் சிந்திக்கச்செய்திருக்கின்றன. சிலமட்பாண்டச்சாடிகளும், சின்னத்தட்டுமாதிரியான விளக்குகளும் தோற்றத்தில் மிகவும் புதியனவாய்க் காணப்படுகின்றனவாம்.

* * *

● யுத்தகாலத்தில் ஆஸ்திரேலியர்களுக்கும், அமெரிக்கருக்குமிடையே இருந்துவந்த சிநேகபந்தனத்தின் ஞாபகார்த்தமாகச் சிட்னிநகரின் சுற்றடலிலுள்ள பீவர்லிகுன்றில் பரலோக இராக்கினிபேரால் ஓர்ஆலயம் கட்டப்படவிருக்கிறது. ஆஸ்திரேலியாவில் இந்தநாமத்துடன் கட்டப்படும் முதற்கோவில் இதுவேயாம்.

●

● இத்தாலிய தபாற்கந்தோர்ப்பகுதியானது மரியன்னைவருட ஞாபகார்த்தமாக இருபுதிய தபால் முத்திரைகளைப் பாவனைக்குவிடுத்துப் புதியவருடத்தைத் தொடக்கியிருக்கின்றது. இவற்றில் ஒன்று 30 லீர் பெறுமதியான முத்திரை. இதிலே அர்ச்சியசிஷ்டர்கள் புடைசூழத் தேவதாயார் காட்சியளிக்கின்றார். மற்றது 60 லீர் பெறுமதியான முத்திரை. மிக்கேல் ஆஞ்செலோசெய்த தேவதாயாருடையவும், திவ்வியயேசுவுடையவும் திருச்சுரூபங்கள் இதிலே பிரதிபலிக்கின்றன.

●

● இன்னும் பத்துவருடகாலத்தில் அமெரிக்க ஐக்கியதேசத்தின் பெரும்பான்மையான வீடுகளிலே சூரியவெப்பஅடுப்பு உபயோகத்திற்கு வந்துவிடுமாம். தற்போது இதன்விலை அதிகமாயிருந்தாலும் விரைவிலே சாதாரணஅடுப்புகள் விற்கும்விலைக்கு அதன்விலை வந்துவிடுமென நம்புகிறேனென்று அமெரிக்க சர்வ கலாசாலையைச் சேர்ந்த பிரபலநிபுணர் திரு. ஏ. ஹரிசன் அவர்கள் கூறுகின்றார்.

●

● சைபீரியாவிலே ஈராயிரம் வருடங்களுக்குமுன் பனிக்கட்டிகளுக்கடியில் புதைந்த குதிரைகளின் உடல்களை ருஷியர்கள் தோண்டியெடுத்திருக்கின்றார்கள். பிடரிமயிர், சேணத்துடன் குதிரைகளின் உடல்கள் துளிகூட அழிந்துபோகவில்லையாம். இந்தக்குதிரைகளும், மற்றும்பல அபூர்வ புதைபொருட்களும் லெனின்கிறாட் நூதனபொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

* * *

● ஸ்பானியதேசத்தின் மிகப்பழமையும், அதிபிரபல்யமுமான வானொலித்தொடர்புடைய 33 நிலையங்களின் மூலம் வாரந்தோறும் குடும்பசெபமாலை ஒலிபரப்பப்படுவதை 40 லட்சம் ஸ்பானியமக்கள் கேட்டு வருகின்றார்கள். ஒவ்வோர் வெள்ளிக்கிழமை இரவும் ஸ்பானியகுடும்பங்கள் தங்கள் இராப்போசனத்தை முடித்ததும் காரணிக்கவிளக்கங்களுடன் குடும்பசெபமாலை ஒலிபரப்பப்படுகின்றது.

* * *

● பர்மாவிலே பாசேல்ஸ், மியோங்மியா பிரிவுகளைக்கொண்ட பகுதியைப் பாப்பரசர் ஒருபுதிய மேற்றிராசனமாக வகுத்துள்ளார். இப்பகுதியில் காரென்சாதியைச்சேர்ந்த ஏராளமான கத்தோலிக்கர் இருக்கின்றனர். வண. ஜோர்ஜ்-யூ-கியா என்ற காரென்சாதிக் குருவானவரே அதன்மேற்றிராணியாராக நியமிக்கப்பெற்றுள்ளார். இவரே முதல்பர்மிய மேற்றிராணியாராவர்.

●

● சிறைவைக்கப்பட்டிருக்கும் போலாந்தின் திருச்சபைஅதிகாரியான கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் வார்சோநகர ஆஸ்பத்திரிஒன்றில் சத்திரவைத்தியஞ் செய்யப்படவிருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. இதற்கென அவர் கிழக்குப் புருசியாவிலே லிட்ஸ்பார்க்பட்டினத்திலுள்ள சிறைச்சாலை ஒன்றிலிருந்து வார்சோநகருக்குக் கொண்டுசெல்லப்படவிருக்கின்றார்.

---

### நன்றி

சதாசகாய மாதாவிடம் கேட்டுக்கொண்டமன்றாட்டு, கிடைக்கப்பெற்றேன். அவவுடைய சகாயம் எங்கும் பிரபலியப்படுவதாக.

K. A.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 27-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org